விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 331 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 29 சனிக்கிழமை (15.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# இனப் பிரச்சினைக்கான முன்நகர்வு தொடர்பில்

## ஜனாதிபதி - தமிழரசுக் கட்சி கொழும்பில் அடுத்த வாரம் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்த முன்நகர்வுகளை மேற்கொள்ள ஜனாதிபதியும் – தமிழரசுக் கட்சியினரும் அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். (02ஆம் பக்கம் பார்க்க)

# 2026ஆம் ஆண்டுக்கான பரீட்சைகள் தொடர்பில்

## கல்வியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

2026ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் பாடசாலைப் பரீட்சைகள் தொடர்பான அறிவிப்பை கல்வி, உயர் 15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.கொட்டடியில்

# போதைப்பொருட்களுடன் சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கஞ்சா கலந்த மாவா மற்றும் போதை மாத்திரைகள் ஆகியவற்றுடன் சந்தேகநபர் ஒரு 15ஆம் பக்கம் பார்க்க

### தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்படாவிட்டால்

# தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு எட்ட முடியாது



## யாழில் தொல்.திருமாவளவன்

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்படாவிட்டால் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு எட்ட முடியாது என இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான முனைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

### தே.க.கல்லூரி விண்ணப்பம்

# வர்த்தமானியின் தமிழ்ப் பதிப்பில் தவறு

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களைச் சேர்த் 15ஆம் பக்கம் பார்க்க

### கழுத்தில் சுருக்கிட்டு

# மனைவியை மிரட்டிய இளம் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தற்கொலை செய்யப் போவதாக கழுத்தில் சுருக்கிட்டு மனைவியை மிரட்டிய இளம் குடும்பஸ்தர் 15ஆம் பக்கம் பார்க்க

### முல்லைத்தீவு சுதந்திரபுரத்தில்

# புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வுப் பணி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சுதந்திரபுரத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைத் தேடி நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

### - பட்ஜெட்டின் இரண்டாம் மதிப்பீடு-

# 118 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

2026ஆம் ஆண்டுக்கான தேசிய மக்கள் சக்தி முன் வைத்துள்ள வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு 118 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றில் நிறைவேறியுள்ளது.

அதன்படி இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 160 வாக்குகளும் 15ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சியில்

# பேருந்து தரிப்பிடத்தில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பேருந்து தரிப்பிடத்தில் பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட ஆனை 15ஆம் பக்கம் பார்க்க



# பட்ஜெட்டை புறக்கணித்த தமிழ் அரசுக் கட்சி

(கொழும்பு)

2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.இந்துக் கல்லூரியில்

# 27 மாணவர்கள்

## சிறப்புத் தேர்ச்சி மூலம் மருத்துவ பீடத்துக்குத் தெரிவு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து இம்முறை மருத்துவபீடத்துக்கு சிறப்புத் தேர்ச்சி மூலம் 27 02ஆம் பக்கம் பார்க்க

## நடுவு நிலை தவறா நன்நெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

எம்முடன்
21 - 02 - 1958



எம்மைவிட்டு
11 - 11 - 2025

## கலைமணி சீனிவாசகம் கலியுகவரதன்

### (பிரபல கட்டிட ஒப்பந்தக்காரர்)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் "திருவதிகை" சுதுமலை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் கலியுகவரதன் (வரதன்) அவர்கள் கடந்த 11.11.2025 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - கண்மணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - இராசம்மா தம்பதியினரின் சிரேஷ்ட மருமகனும் சுசிலாதேவியின் பாசமிகு கணவரும் திலக்ஷன், கலீஷிஜா, கபிலஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயறூபி, கௌசிகன் ஆகியோரின் மாமனாரும் மாயோன், சேயோன், எயினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 9.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் மு.ப 11.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுதுமலை
077 176 8394

(C-4331)

தகவல் :
குடும்பத்தினர்

## இனப் பிரச்சினை...

எதிர்வரும் புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் குறித்த பேச்சுவார்த்தை நடைபெறும் எனத் தெரியவருகின்றது.

இந்த விடயம் குறித்து பேசுவதற்காக நேரம் ஒதுக்கித்தருமாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்த கோரிக்கை கடிதத்தின் அடிப்படையில் இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஏற்கெனவே இன்னொரு முக்கிய விடயத்துக்கான சந்திப்புக்காக புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை நண்பகல் நேரத்தை வழங்கியிருக்கின்றார். அந்தச் சந்திப்பு நடக்கும் நாளுக்கு மற்றைய தினத்தில் இந்தச் சந்திப்பு நடக்கும் என்று ஜனாதிபதியின் செயலக அதிகாரிகள் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரோடு தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்திருக்கின்றார்கள் என அறியவருகின்றது.

புதன்கிழமையா? வியாழக்கிழமையா? சந்திப்பது என்பதை இன்று அல்லது நாளை ஜனாதிபதி செயலகம் தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகளுக்கு உறுதிப்படுத்தும் எனத் தெரிகின்றது

தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர், பொதுச்செயலாளரோடு கட்சியின் எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றுவர் எனத் தெரிகின்றது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றிய பேச்சுக்கள் என்பதால் அது குறித்து மட்டுமே இந்த உரையாடலில் கலந்துரையாடப்படும் என்றும், தீர்வுக்காக முன்னகரும் அதே நேரம், அதற்கிடையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துதல்.

அதுவரையில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் ஆகியவை குறித்தும் தமிழரசுக் கட்சி இந்தச் சந்திப்பில் வலியுறுத்தும் எனத் தெரியவருகின்றது. (ம-7)

## யாழ். இந்து...

மாணவர்கள் தெரிவாகி சாதனைப் படைத்துள்ளனர்.

கடந்த 2024 க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி, நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக நுழைவுக்கான மாணவர்களின் மருத்துவ பீட விபரங்கள் வெளியாகியுள்ளன.


இதற்கமைய, இலங்கை முழுவதும் 333 மாணவர்கள் மருத்துவபீடத்திற்கு சிறப்புத் தேர்ச்சியில் தெரி வாகியுள்ளனர்.

இலங்கையில் 18 பாடசாலைகளில் மாத்திரமே இரட்டை இலக்க எண்ணிக்கையில் மாணவர்கள், சிறப்புத் தேர்ச்சியில் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

அதன்படி, கொழும்பு ஆண்கள் பாடசாலையான றோயல் கல்லூரி மற்றும் பெண்கள் பாடசாலையான விசாகா வித்தியாலத்தில் 75 வீதமான மாணவர்கள் சிறப்புத் தேர்ச்சியில் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகிய மாணவர்களில் சிறப்புத் தேர்ச்சியில் தெரிவாகிய மாணவர்களின் சதவீதம் 85.19 எனும் அதிகூடிய அளவைப் பதிவு செய்து சாதனைப் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம)

# மரண அறிவித்தல்



தோற்றம்
22.12.1952

மறைவு
12.11.2025

## வீரகத்தி கயிலாயபதி [கிளி]

### (ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் – நீர்ப்பாசனத் திணைக்களம், வடமாகாண காணி நிர்வாகத் திணைக்களம்)

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கையும் தற்போது 154/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி கயிலாயபதி அவர்கள் கடந்த (12.11.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - பவானியம்மா தம்பதியரின் மருமகனும் ஞானேந்திரி அவர்களின் பாசமிகு கணவரும் சுதாகர் (Software Engineer - Meta, UK), யாழினி (Doctor) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சஞ்சீவன் (Doctor), ஜெயசுமங்கலா (Lecturer,UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் குஞ்சுத்தம்பி (Germany), காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் மற்றும் தங்கராணி, கணேசமூர்த்தி (Germany), கலாவதி (Swiss) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாஸ்கரன் (ஓய்வுநிலை அதிபர்), வாகீசன் (ஓய்வு நிலை அதிபர்), தேவரஞ்சன் (France), நந்தபூபன் (QS,Australia), யோகேந்திரி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

154/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(5924)

077 954 3968 (மகன்)
077 213 2294 (மகள்)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைநிறுத்தத்திற்கு தயாராகும் ஆசிரியர் தொழிற் சங்கங்கள்

(கொழும்பு)

பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீட்டிப்பது உட்பட அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட கல்வி சீர்திருத்தங்களுக்கு கல்வி தொழிற்சங்கங்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு உரையாற்றிய ஆசிரியர் அதிபர்கள் சங்கத்தின் அழைப்பாளர் உலபனே சுமங்கல தேரர், இந்த சீர்திருத்தங்களை திரும்பப் பெறக் கோரி டிசெம்பர் 12 ஆம் திகதி பல தொழிற்சங்கங்கள் நாடு முழுவதும் வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளும் என்றும் அறிவித்தார்.

வழக்கமாக நிர்வாகத்தை ஆதரிக்கும் தொழிற்சங்கங்களிடமிருந்து கூட ஆட்சேபனைகள் இருந்தபோதிலும், முன்மொழியப்பட்ட பாடசாலை நேர நீட்டிப்பை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. நிலவும் எதிர்ப்பைக் கருத்தில் கொள்ளாமல், முன்மொழியப்பட்ட மாற்றங்கள் குறித்து ஏற்கனவே அதிகாரப்பூர்வ சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சீர்திருத்தங்களை அரசாங்கம் திரும்பப் பெறத் தவறினால், டிசெம்பர் 12 க்குப் பிறகு நாடு முழுவதும் கால வரையற்ற வேலைநிறுத்தத்தைத் தொடங்க தொழிற்சங்கங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் எச்சரித்தார். (நி)

# மக்கள் அதிகாரத்திற்கே முன்னுரிமை!- ஜனாதிபதி உறுதி

**(கொழும்பு)............ வென்றெடுக்கப்பட்ட அதிகாரம் பொது மக்களுக்காக மாத்திரமே என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**



. கார்த்திகை வீரர்கள் தின நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஒன்றாக குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தற்போது ஒன்றிணைந்து விட்டதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், "கடந்த காலங்களில் அரசியல் தலைமைகளிடம் வாக்குமூலம் பெற விசாரணை அதிகாரிகள் அவர்களுடைய வீட்டிற்கு செல்ல வேண்டியிருந்தது எனினும் தற்போது சக மனிதர்கள் செல்லும் அதே வாசல் வழியாக அரசியல் தலைமைகளும் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு சென்று வருகின்றனர்.

எங்களுடைய அரசாங்கத்தை வீழ்த்துவதாக கதை பேசி வருகின்றனர்.

அது நடக்காது. இந்த அரசாங்கம் மேலும் உறுதியாக கட்டியெழுப்பப்படும். கட்சி பேதங்களின்றி அரசாங்கம் தனது பணியை நிறைவேற்றும்.

சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்களே." என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ஐயப்ப யாத்திரை
## புனித யாத்திரையாக பிரகடனம்
### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

ஐயப்ப பக்தர்களின் நீண்ட கால எதிர்பார்ப்பாக இருந்த ஐயப்ப யாத்திரையினை புனித யாத்திரையாக பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஐயப்ப பக்தர்களின் நீண்ட கால எதிர்பார்ப்பாக இருந்த ஐயப்ப யாத்திரையினை புனித யாத்திரையாக பிரகடனப்படுத்தும் கோரிக்கையினை பெருந்தோட்ட மற்றும் சமூக உட் கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பின் வேண்டுகோளுக்கிணங்க புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவியின் ஆலோசனையின் பிரகாரம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் பரிந்துரைக்கமைய அமைச்சரவை அனுமதி பெற்றதுடன் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இது உலக வாழ் ஐயப்ப பக்தர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியாவதோடு, ஐயப்பன் யாத்திரையினை புனித யாத்திரையாக பிரகனப்படுத்திய ஒரே நாடு இலங்கை என்ற பெருமையினையும் பெற்றுள்ளது. (நி)

# புதிய தேர்தல் ஆணையாளராக கடமைகளை பொறுப்பேற்றார் ரசிக பீரிஸ்



(கொழும்பு)

புதிய தேர்தல் ஆணையாளராக ரசிக பீரிஸ் நேற்று முதல் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் தனது பதவியிலிருந்தும் அரசு சேவையிலிருந்தும் ஓய்வு பெற்றார்.

ஒரு அறிக்கையை வெளியிட்டு, ரத்நாயக்க, 34 வருட அரச சேவைக்குப் பிறகு பதவி விலகுவதாக அறிவித்தார்.

அவர் ஒக்டோபர் 16, 2019 அன்று தேர்தல் ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார், அதன் பின்னர் அவரது பதவிக் காலத்தில் தேசிய மற்றும் உள்ளூர் தேர்தல்களை நடத்துவதில் முன்னணிப் பங்காற்றியுள்ளார். (நி)

# இலங்கையின் பட்ஜெட்
## மதிப்பாய்வு செய்யும் ஐ.எம்.எப்



(வோஷிங்டன்)

இலங்கை தற்போதைய பிணை எடுப்புத் திட்டத்தின் நிபந்தனைகளுடன் ஒத்துப் போகிறதா என்பதைத் தீர்மானிக்க சர்வதேச நாணய நிதியம் அண்மையில் அறிவிக்கப்பட்ட இலங்கையின் 2026 வரவு-செலவுத் திட்டத்தை மதிப்பீடு செய்து வருவதாக ஐ.எம்.எப். இன் தகவல் தொடர்புத் துறை பணிப்பாளர் ஜூலி கோசாக் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், இலங்கையைப் பொறுத்தவரை, கடந்த ஒக்டோபர் 9 ஆம் திகதி, ஒரு மாதத்திற்கு முன்பு, ஐ.எம்.எப் ஊழியர்களும் இலங்கை அதிகாரிகளும் நிதியத்துடனான இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஏற்பாட்டின் ஐந்தாவது மதிப்பாய்வில் பணியாளர் நிலை ஏற்பாட்டை எட்டினர்.

இந்த மதிப்பாய்வு ஐ.எம்.எப் இன் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டவுடன், இலங்கைக்கு சுமார் US $347 மில்லியன் நிதியுதவி கிடைக்கும். வாரியக் கூட்டம் வரும் வாரங்களில் நடைபெறும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இலங்கையின் 2026 வரவு- செலவுத் திட்டம் ஐ.எம்.எப் இன் பிணை எடுப்பு திட்டத்தின் நிபந்தனைகளுடன் ஒத்துப் போகிறதா என்பதை மதிப்பிடுவதற்காக வெளியிடப்பட்ட பட்ஜெட் ஆவணங்களை ஊழியர்கள் மதிப்பாய்வு செய்கிறார்கள்.

கட்டமைப்பு சீர்திருத்தங்களைப் பொறுத்தவரை, இலங்கையின் சாத்தியமான வளர்ச்சியை மேலும் அதிகரிப்பதற்கு கட்டமைப்பு சீர்திருத்தங்கள் முக்கியமாக இருக்கும்.

எனவே, வர்த்தகத்தை தாராளமயமாக்குவதில் தொடர்ச்சியான முயற்சிகள், தொடர்புடைய சீர்திருத்தங்களை எளிதாக்குதல், வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான விதிமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் நெறிப்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

மேலும், அரசாங்கத்தின் செயற்றிட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள நிர்வாக சீர்திருத்தங்களை செயற்படுத்துவதை விரைவுபடுத்துவது முக்கியம்.

இறுதியாக, நலன்புரி சலுகை கொடுப்பனவு திட்டத்தை ஆழப்படுத்துவதன் மூலம் சமூக பாதுகாப்பை மேம்படுத்துதல் அவசியம். எனவே, இலங்கையின் வளர்ச்சியை அதிகரிக்க நாங்கள் எதிர்பார்க்கும் சில சீர்திருத்தங்கள் அவை. என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# அநாகரிகமான வார்த்தைகளை பாராளுமன்றில் பயன்படுத்த தடை!
## சபாநாயகர் அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்ற சபை நடவடிக்கைகளின் போது, பொருத்தமற்ற, அநாகரீகமான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அறிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற சபை நடவடிக்கையின் ஆரம்பத்தில், சபாநாயகரின் அறிவித்தலாக அவர் இதனை குறிப்பிட்டார். சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அநாகரீகமான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவதை தொடர்ச்சியாக தாம் அவதானித்து வருவதாகவும் அவ்வாறான வார்த்தைப் பிரயோகங்கள் பாராளுமன்ற கௌரவத்தை சீர்குலைப்பதுடன், வேதனைப்படக்கூடிய விடயமாக கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களை தனிப்பட்ட ரீதியில் பெயர் கூறியும், அவர்களை இலக்கு வைத்தும், அநாகரீகமான வார்த்தைப் பிரயோகங்களை இனிவரும் காலத்தில் சபையில் பயன்படுத்தக் கூடாது என எச்சரித்துள்ளார்.


நாட்டின் உயர்பீடமாக திகழும் பாராளுமன்றத்தின் ஒழுக்கத்தை உரியமுறையில் பேணுவதற்கு, மக்கள் பிரதிநிதிகள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் சபாநாயகர் கோரியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இலங்கை வரலாற்றில் முதல்முறையாக 'லங்கா ரைட்' சைக்கிள் ஓட்டப்போட்டி

### டிசம்பர் 18 இல் ஆரம்பம்



இலங்கை வரலாற்றில் முதன் முறையாக ஒழுங்கு செய்யப்படும் "லங்கா ரைட் 2025" சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் டிசம்பர் 18 முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறும் என விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

டிசம்பர் 18 ஆம் திகதி லேக் ஹவுஸ் வளாகத்தில் தொடங்கி, பேலியகொடை பொலிஸ் நிலையம் வரை சுதந்திர ஓட்டமாக ஆரம்பித்து அங்கிருந்து உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் இப்போட்டியின் முதல் நாளில் 106 கிலோ மீற்றர் பயணித்து கன்னொருவயை வீரர்கள் அடைவார்கள்.

இரண்டாம் நாள் கண்டியில் இருந்து அநுராதபுரம் வரையிலும், மூன்றாம் நாள் அநுராதபுரத்தில் இருந்து கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கம் வரையிலும் சவாரி செய்து போட்டியாளர்கள் நிறைவு செய் வார்கள்.

வீரர்கள் 4 முதல் 6 வீரர்கள் கொண்ட அணியாகப் போட்டியில் நுழையலாம். விண்ணப்பிக்க இறுதித் திகதி டிசம்பர் 12 ஆகும். வெற்றியாளர்களுக்கு 6 இலட்சம் ரூபாய் முதல் 25 ஆவது இடம் வரை ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்.

மேலும், சிறந்த இளம் வீரர், சிறந்த மலை ஏறுபவர் மற்றும் சிறந்த அணி ஆகியோருக்கும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட உள்ளன. (3)



23 ஆவது தேசிய மெய்வல்லுநர் போட்டியில் இலங்கை சார்பில் 1 தங்கம் மற்றும் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்த யாழ்.வீரர் செல்வராசா ரமணன் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் குறித்த வீரருக்கு பொன்னாடை போர்த்தி மலர் மாலையிட்டு கௌரவித்தார். (படம்: ஐ.சிவசாந்தன்)

## முல்லைத்தீவில் நடைபெற்ற மல்யுத்த பயிற்சி முகாம்

வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுப்பிரிவின் ஒழுங்கமைப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு நாட்களைக் கொண்ட மல்யுத்த பயிற்சி முகாம் கடந்த புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களும் முல்லைத்தீவு மாவட்ட உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன் ஆகியோர் இணைந்து இந்த பயிற்சி முகாமினை ஆரம்பித்து வைத்தனர்.



வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 60 வீரர்களுக்கான மல்யுத்த பயிற்சி நெறியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 50 வீரர்கள் கலந்து கொண்டதுடன் வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாண வீரர்களும் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கான மல்யுத்த பயிற்சியினை தேசிய மல்யுத்த பயிற்றுனர்கள் வி. திருச்செல்வம், என்.நிஷேத் ஆகியோர் வழங்கியிருந்தனர். (3-90-299)

## ரி-20 தொடர்

## மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தி தொடரை வென்ற நியூசிலாந்து

மேற்கிந்திய தீவுகள் - நியூசிலாந்து அணிகள் இடையேயான 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெற்றது. இதில் முதல் 4 போட்டிகள் முடிவில் நியூசிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. ஒரு போட்டி மழையால் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் இரு அணிகளுக்கு இடையேயான 5 ஆவது மற்றும் இறுதி ரி-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் விளையாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, நியூசிலாந்தின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி 18.4 ஓவரில் 140 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக ரோஸ்டன் சேஸ் 38, ஷெப்பர்ட் 36 ஓட்டங்கள் எடுத்தனர். நியூசிலாந்து தரப்பில் ஜேக்கப் டஃபி 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதனையடுத்து களமிறங்கிய நியூசிலாந்து அதிரடியாக விளையாடி 15.4 ஓவரில் 141 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக கான்வே 47 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 3-1 என்ற கணக்கில் நியூசிலாந்து கைப்பற்றியது. (3)




## அயர்லாந்துக்கு எதிரான முதல் டெஸ்டை கைப்பற்றியது பங்களாதேஷ்!

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அயர்லாந்து கிரிக்கெட் அணி 2 டெஸ்ட், 3 ரி-20 கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையே முதலில் டெஸ்ட் தொடர் நடைபெறுகிறது.

அதன்படி பங்களாதேஷ் - அயர்லாந்து இடையிலான முதல் டெஸ்ட் போட்டி சில்ஹெட்டில் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகியது. இதில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி முதல் இன்னிங்சில் 92.2 ஓவர்களில் 286 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக ஸ்டிர்லிங் 60 ஓட்டங்கள் சேர்த்தார். பங்களாதேஷ் தரப்பில் மெஹிதி ஹசன் மிராஸ் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய பங்களாதேஷ் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 587 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை நிறைவு செய்தது. இதன் மூலம் முதல் இன்னிங்சில் பங்களாதேஷ் 301 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. அந்த அணியின் ஹசன் ஜாய் அதிகபட்சமாக 171 ஓட்டங்களும், கப்டன் ஷாண்டோ 100 ஓட்டங்களும் குவித்தனர்.

இதனை தொடர்ந்து 301 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய அயர்லாந்து அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. 70.2 ஓவர்கள் தாக்குப்பிடித்த அயர்லாந்து அணி 2 ஆவது இன்னிங்சில் 254 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இதன் மூலம் பங்களாதேஷ் இன்னிங்ஸ் மற்றும் 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அத்துடன் தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப் பரீட்சையில் சித்திபெறும்

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு திறக்கப்படும் கல்விக் கதவுகள்

**(கொழும்பு) ..........................**
**உயர்தரப்பரீட்சையில் தகுதி பெறும் விசேட தேவையுடைய மாணவர்கள் நாட்டிலுள்ள ஒவ்வொரு பல்கலைகழகத்திலும் உள்ள அனைத்து பீடங்களிலும் அனுமதிக்கப்படுவார்கள் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்னவினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, விசேட தேவையுடைய மாணவர்களுக்கு நான்கு பீடங்களில் மாத்திரமே வாய்ப்புகள், வழங்கப்பட்டு வந்த நிலையிலேயே புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. (நி)



சுன்னாகம் பொது நூலகத்தில் சிறுவர் வாசிப்பு வட்டத்தினர் நடத்தும் புத்தகச் சந்தை. கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது. இந் நிகழ்வில் வலி தெற்கைச் சேர்ந்த பல சிறுவர்கள் பங்கு பற்றிப் பயனடைந்திருந்தனர்.

## வாகன இறக்குமதி

# அடுத்த வருடம் குறைவடையலாம்

(கொழும்பு)

வாகன இறக்குமதி குறைவதால் அடுத்த ஆண்டு வரு வாய் வளர்ச்சி குறையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த வருட இறுதி 4 மாதங்களில் 582 மில்லியன் அமெரிக்க டொலருக்கு வாகனம் இறக்குமதி செய்யப்படுமென எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் வாகன இறக்குமதி வரிகள் எதிர்பார்த்ததை விட ரூ.100 பில்லியனுக்கும் அதிகமான வருவாயை ஈட்டியுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான பொது நிதி குழு பாராளுமன்றத்தில் கூடிய போது இந்த உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, நடப்பாண்டின் முதல் 10 மாதங்களில் 2,50,000 வரையான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் 63,000 கோடி ரூபா வரி வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் 09 மாதங்களில் மாத்திரம் வாகன இறக்குமதிக்காக 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி செலவு செய்யப்பட்டுள்ளதுடன், வாகன இறக்குமதிக்காக அதிக நிதி கடந்த செப்ரெம்பர் மாதமே செலவிடப்பட்டுள்ளதாக புதிய தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

வாகன இறக்குமதிக்காக கடந்த செப்ரெம்பர் மாதத் திலேயே அதிக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், கடந்த செப்ரெம்பர் மாதம் வாகன இறக்குமதிக்காக 286 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

**சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**
**கூறுவிலை கோரல்**
சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க களஞ்சிய பின்பகுதியில் ஆறு அடி சுற்றளவுள்ள வேப்பமரம் விற்பனைக்குண்டு.
தாங்கள் காரியாலய நேரத்தில் பார்வையிட்டு பெறுமதியினை மதிப்பிட்டு மூடிய கூறுவிலையை 29.11.2025 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் தலைவர், சங்கானை ப. நோ.கூ.சங்கம், சங்கானை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
**தலைவர் -021 225 0126** (C-4329)


**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை- புத்தூர்**
**முன்பள்ளிகளுக்கு மாணவர்களை இணைத்தல்-2026**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் நவீனதொழில்நுட்பத்துடன் கூடிய (Smart Preschool) பின்வரும் முன்பள்ளிகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**
- அரிச்சுவடி முன்பள்ளி - ஆவரங்கால்
- கஜமுகன் முன்பள்ளி - அச்சுவேலி
- சிகரம் முன்பள்ளி -இருபாலை

முன்பள்ளிகளில் கல்வி கற்க அனுமதி பெறும் மாணவர்களுக்கு கீழ்வரும் வசதிகள் வழங்கப்படும்.
- தாய்மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
- எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.
- தகைமை பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- இலவச சீருடை வழங்கப்படும்.
- இலவச சத்துணவுகள் வழங்கப்படும்
- இலவச கல்விச் சுற்றுலா வசதிகள்
- வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றது.
- அதிகப்படியான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் போது வருமானம் குறைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறித்த முன்பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளை இணைத்துக் கொள்ள விரும்பும் பெற்றோர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தை வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் முன்பள்ளிகளில் பெற்றுக்கொள்ள முடியும்.
விண்ணப்பங்களை பூரணப்படுத்தி **15.12.2025** ஆம் திகதிக்கு முன்னர் குறித்த முன்பள்ளிகளிலோ அல்லது புத்தூர், அச்சுவேலி, கோப்பாய் உபஅலுவலகங்களிலோ அல்லது புத்தூரில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
மேலதிக தகவல்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.
1. தலைமை அலுவலகம் - 021 205 8867
2. புத்தூர் உப அலுவலகம் - 021 205 8988
3. அச்சுவேலி உப அலுவலகம் - 021 205 8972
4. கோப்பாய் உப அலுவலகம் - 021 205 8974

(C-4328)
15.11.2025
**தியாகராஜா நிரோஷ்,தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

**100 ஆவது பிறந்த நாளும் 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்**
**31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 09.09.1925
மறைவு 19.10.2014
அமரர்.சுப்பையா திருநாவுக்கரசு
திதி - ஏகாதசி 15.11.2025



தோற்றம் 09.06.1934
மறைவு 26.05.1994
அமரர். திருநாவுக்கரசு திரவியம்

நீங்கள் இருவரும் எங்களை விட்டுப்பிரிந்து எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் எங்களை வளர்த்து வாழ்வதற்கு வழிகாட்டிய தந்தையும் தாயையும் எம் நினைவில் இருத்தி, எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வங்களை எங்கள் மனம் தேடி நிற்கிறது உங்கள் ஆத்மா சாந்தி அடைய வெல்லில் முருகனை வேண்டி நிற்கிறோம்.
ஓம் சாந்தி சாந்தி! சாந்தி!!!

அன்புடன் நினைவு கூரும், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"மூர்த்திவாசம்" முருகமூர்த்தி வீதி,
(1890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவில் ஆபிரிக்க நத்தைகளின் ஊடுருவல் அதிகரிப்பு

**(யாழ்ப்பாணம்)** யாழ்.மாவட்டத்தின் தீவக பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களுக்குள் ஆபிரிக்க நத்தைகளின் ஊடுருவல் அதிகரித்துள்ள நிலையில், அவற்றை கட்டுப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயுமாறு மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட விவசாய குழுக்கூட்டம் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்றது. இதன் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கடல் கடந்த தீவுகளில் ஒன்றான நெடுந்தீவில் ஆபிரிக்க நத்தைகளின் ஊடுருவல் அதிகரித்திருக்கிறது.

குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரபாகரன் மக்கள் தமது அன்றாட வாழ்க்கைக்கு தேவையான தானியங்கள் மற்றும் மரக்கறிகளை நெடுந்தீவிலே உற்பத்தி செய்கிறார்கள். இந்நிலையில் ஆபிரிக்க நத்தைகளின் ஊடுருவல், அதிகளவான தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

இத்தனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராவிட்டால் அங்கு வாழ்கின்ற மக்களின் உணவு தேவையை பூர்த்தி செய்வதில் பாரிய சிக்கல் நிலை ஏற்படுவதுடன் வாழ்வாதாரத்தை இழந்து போகும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படும்.



குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் உள்ளடக்கிய குழு ஒன்றை உருவாக்கி குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார். (8)

# உலக நீரிழிவு தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு நடைபயணம்



(யாழ்ப்பாணம்) உலக நீரிழிவு தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் ஒழுங்கமைப்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தலைமையில் விழிப்புணர்வு நடைபயணம் நேற்றைய தினம் காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலிருந்து ஆரம்பமானது.

இந் நடைபயணத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், நீரிழிவு வைத்திய நிபுணர் எஸ். அரவிந்தன், பொது வைத்திய நிபுணர் சிவன்சுதன், பொது வைத்திய நிபுணர் கேதீஸ்வரன், வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி லீ. லலீசன், உயிரியல் ஆசிரியர் குணசீலன், பௌதீகவியல் ஆசிரியர் சோதிநாதன், மருத்துவர்கள். தாதியர்கள், மருத்துவ பீட மாணவர்கள், யாழ்ப்பாண மாவட்ட நீரிழிவு சங்கத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (8-33)

# பனம் விதைகளை நாட்டினார் தொல்.திருமாவளவன்



(கரணவாய்) வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வடமராட்சி மண்டான் உப்புவீதி பகுதியில் நேற்று பனம் விதைகள் நடுகை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழ் நாடு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் கலந்து கொண்டு பனம் விதைகளை நாட்டி வைத்தார்.

இதில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மதுவரித் திணைக்கள அதிகாரிகள், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்க நிர்வாகிகள், பணியாளர்கள், உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டு பனம் விதைகளை நாட்டிவைத்தனர். (8-60)

# வடக்கில் நூலக சேவைகள் பணியகம் விரைவில் உருவாக்கப்படும்



(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாணத்தில் நூலக சேவைகள் பணியகம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று வெள்ளிக் கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பணிப்பாளர் நாயகம் தலைமையிலான குழுவினர் ஆளுநரைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இலங்கையின் சில மாகாணங்களில் ஏற்கனவே மாகாண மட்டத்திலான நூலக சேவைகள் பணியகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் மாவட்ட மட்டமும், பிரதேச செயலக மட்டமும் சார்ந்த நூலக சேவைகள் பணியகங்கள் செயற்பட்டு வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

அதேபோன்று மாகாண பொதுநூலகம் மற்றும் மாவட்ட பொதுநூலகங்களும் இதன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன எனவும் ஆளுநருக்கு விளக்கினர்.

வடக்கு மாகாணத்தில் நூலக சேவைகள் பணியகம் உருவாக்கப்படும் என்ற யோசனையை ஆளுநர் வரவேற்று, அதற்குத் தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

இலத்திரனியல் நூலக சேவைகளை விரிவுபடுத்தவும், அதற்கான பயிற்சிகளை வழங்கவும் தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபை எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஆளுநர் நன்றியைத் தெரிவித்தார்.

அதேவேளை, புத்தக வெளியீட்டுக்கான உதவிகளைக் கோரி வடக்கு மாகாணத்திலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் குறைவாக உள்ளன என்ற தகவலை தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபை முன் வைத்தது.

இதற்கு பதிலளித்த ஆளுநர், உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக தேவையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார்.

கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாணம் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஆளுநரின் உதவிச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (8)

# மாவீரர்நாள் நினைவேந்தல் முன்னேற்பாடுகள் ஆராய்வதற்கு முதல்வர் களவிஜயம்



(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் மாநகர சபையின் கடந்த 11 ஆம் திகதிய மாதாந்த சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக அனைத்துக் கட்சிகளின் பங்குபற்றுதல்களுடன் மாவீரர் நாள் நினைவேந்தல்களை ஒழுங்குபடுத்துவதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கும், தேவையான முதற்கட்ட வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்குமான கள விஜயம் ஒன்றினை யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா நேற்று முன் தினம் மேற்கொண்டிருந்தார்.

நினைவேந்தல் மேற்கொள்ளப்படவுள்ள மாநகர சபையின் நல்லூர் இந்து விடுதிக்கு அருகாமையிலுள்ள இடத்திற்கு விஜயம் செய்து மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் களத்திற்கு வருகை தந்திருந்த அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

அனைத்துக் கட்சிகளினதும் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படவுள்ள இம் மாவீரர் நாள் நினைவு கூரல் நிகழ்வு ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் மேற்படி கள விஜயத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி, தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளின் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோட்டத் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு அரசாங்கத்தை பாராட்டிய திகாம்பரம்

(கொழும்பு) தோட்டத் தொழிலாளர்களின் ஊதியப் பிரச்சினைகளைத் தீர்க்க ரூ. 5,000 மில்லியன் ஒதுக்கியதற்காக அரசாங்கத்தைப் பாராட்டினார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம்.

"இந்த சமூகம் கடந்த 200 ஆண்டுகளாக நாட்டுக்காக உழைத்துள்ளது.

எனவே இந்த ஊதிய உயர்வு வரி செலுத்துவோரின் பணத்திலிருந்து வழங்கப்படுகிறது என்ற விமர்சனம் அர்த்தமற்றது," என்று அவர் வாதிட்டார்.

எதிக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ மற்றும் நிசாம் காரியப்பர் ஆகியோரை நேரடியாகச் சாடியதுடன் தங்கள் ஆட்சிக் காலங்களில் ஊதிய உயர்வை வழங்கத் தவறிய எதிர்க்கட்சிகள் இந்த முடிவை விமர்சிக்காமல், "இந்த அரசாங்கத்தால் ஊதிய உயர்வை வழங்க முடிந்தால், நாம் அதைப் பாராட்ட வேண்டும், எங்கள் ஆதரவைக் கூற வேண்டும்," என்று அவர் வலியுறுத்தினார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (நி)

# சித்தராயர் வழிவந்த சித்த வைத்தியர் குணரத்தினம் முத்துப்பிள்ளை தம்பதிகள் பெற்றெடுத்த முத்துக்கள் அத்தனையும் சித்த வைத்தியரே!



டாக்டர் திருமதி. தெய்வானைப்பிள்ளை பூலோகசுந்தரம்




டாக்டர் திருமதி. கந்தசாமி சிவக்கொழுந்து



டாக்டர் குணரத்தினம் சங்கரப்பிள்ளை (பிரபல சித்த ஆயுள் வேத வைத்தியர்)

25 ஆவது நினைவஞ்சலி




15.11.2000-15.11.2025


டாக்டர் குணரத்தினம் செல்வத்துரை (ஓய்வு பெற்ற அதிபர், பிரபல வைத்தியர்)



டாக்டர் திருமதி செல்வத்துரை பொன்னம்மா (வைத்திய பூபதி, பாரம்பரிய வைத்தியர்)



டாக்டர் குணரத்தினம் திருச்செல்வம் (வைத்தியர்)



டாக்டர் பூலோசுந்தரம் கயிலநாதன் (D.A.M.S (CEY))

"சகஸ்ராபிஷேக வைத்திய சூரி" முன்னாள் முகாமையாளர், பராளாய் ஈஸ்வரவிநாயகர் சுழிபுரம்.



டாக்டர் செல்வத்துரை வரதரத்தினம்



டாக்டர் செல்லத்துரை இராசரத்தினம்



டாக்டர் சி.சுப்பையா

'முறிவு நெறிவு நோ வைத்தியரும் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும்.

(எதிர்பாராத விபத்தில் இறந்தார்)

**மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திக்குழுச் செயலாளர் ஆயுள்வேத வைத்தியர் கிருபாரத்தினம் ஆசிரியர் தினவிழாவில் அதிபர், ஆசிரியர்களை வாழ்த்தியும், பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்க்கு நகரப்புற பாடசாலைக்கு போகாமல் கிராமப்புற பாடசாலையில் கல்வியைத் தொடர வைக்கும்படி அன்பான வேண்டுகோளை முன்வைத்தார்.**

மதிப்புக்குரிய அதிபர் அவர்களே, பிரதி அதிபர் அவர்களே மற்றும் இன்றைய விழாவை சிறப்பிக்க வந்த பிரதமவிருந்தினர் இலங்கை வங்கி முகாமையாளர் அவர்களே, ஆசியுரை வழங்க வந்த சிவஸ்ரீ உமாசுதன் ஐயா அவர்களே, மாணவச் செல்வங்களே அனைவருக்கும் காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது பாடசாலைச் செயலாளர் என்ற வகையில் ஒரு சில கருத்தைக் கூற விரும்புகிறேன்.

கல்வி தொடர்பாக ஆதிகாலத்தில் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாச நூல்களில் குரு சிசியன் முறையில் கல்வி புகுத்தப்பட்டது. அரச வம்சமாகச் சரி சாதாரண ஆட்களாக சரி குருவிடம் தத்தமது பிள்ளைகளை கல்விக்காக குருமாரிடம் பாரம் கொடுத்து விடுவார்கள். உதாரணமாக அரச வம்சத்தைச் சேர்ந்த கிருஸ்ணரும் குசேலரும் ஒன்றாக கல்வி கற்றுள்ளார்கள். இதே போன்ற பாரதக் கதைகளில் பாண்டவர்கள் தத்தமது குருவுடனே கல்வியை கற்றுவந்தார்கள். இவ்விதம் கல்வி கற்று வந்த எமது சமுதாயம் பின்னர் திண்ணைக் கல்வியில் கற்று உள்ளார்கள். அதன் பின் தற்போது பாடசாலை மூலம் பிள்ளைகள் கல்வியைக் கற்று வருகிறார்கள்.

ஒரு சமுதாயத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டுவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். அவ்விதம் எமது மயிலணி ஸ்சைவ மகா வித்தியாலயம் அதிபர் பார்த்தீபன் அவர்களின் வழிகாட்டலில் இங்கு கல்வி புகட்டும் ஆசிரியர்களின் விடா முயற்சியாக எமது பிள்ளைகளுக்கும் கல்வியை மட்டுமில்லாமல் ஒழுக்கத்தையும் விளையாட்டுத் துறையிலும் மிகக் கன்னியமான முறையில் தமது கடமைகளை எவ்வித குறையும் இன்றி நிறைவுடன் செய்து வருகின்றனர்.

அதோடு மதிய நேரம் கொடுக்கப்படும் உணவு மிக தரமானதாக இருக்கிறது. எனது மகனும் கல்வி கற்று வருகிறார். அவர் பாடசாலை முடிந்ததும் வீட்டிற்கு வந்து உணவு அருந்துவதில்லை பாடசாலை உணவு மிக தரமானதென அக மகிழ்கிறார். பிரத்தியேக வகுப்புக்குப் போக மறுக்கிறார். எனவே இப்பாடசாலை மகா தங்கிய அதிபர், ஆசிரியர்களின், தங்களின் கடமைகளைச் சீரும் சிறப்புமாகச் செய்து வருவதை இட்டு இப்பாடசாலைச் செயலாளர் என்ற முறையில் அக மகிழ்ச்சியடைகிறேன், அவர்களின் சீரான பணி தொடர்ந்து சீராக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். மற்றும் 11ஆம் வகுப்பு மாணவ, மாணவிகள் இன்றைய விழாவை மிக சிறப்பாக செய்வதையிட்டு ஆசிரியர்களின் திறமைகளை மாணவர்கள் உணர்ந்துள்ளார்கள். போன வருடம் மத சிறிலங்கா போட்டியில் எனது மகன் உட்பட தேசிய ரீதியில் முதலாம் இடத்தை கொழும்பு நகரில் அலரி மாளிகையில் மாண்புமிகு பிரதமர் தினேஸ் குணவர்த்தன அவர்களிடம் பாடசாலைக்கு 30 இலட்சம் ரூபாய் காசோலையும் வழங்கி கிராமப்புற பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளார்கள். இவைகளுக்கு காரணம் ஆசிரியரின் முயற்சி ஆகும். மற்றும் "சாதனை மாணவன் பார்கவின்" எமது பாடசாலையில் ஒரு வருடத்தில் மூன்று தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொண்டு எமது பாடசாலைக்கு பெருமையைத் தந்துள்ளார். அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்று எமது பாடசாலைக்கு பெருமைச் சேர்த்துள்ளார். சகல பெற்றோர்களுக்கும் நாம் வைத்தியர் என்ற ரீதியில் ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். எமது பிள்ளைகள் நகர்புற பாடசாலைக்குப் போகாமல் எனது கிராமப்புற பாடசாலையில் கல்வி கற்க ஆவண செய்யவும் பிள்ளைகள் அயல் கிராம பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகள் நல்ல ஓய்வு எடுப்பார்கள். பலவிதமான காய்ச்சல்கள் எங்களை அறியாமல் வருகின்றது. ஆகவே வீட்டுக்கு அருகாமையில் உள்ள பாடசாலையில் கல்வியைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### வைத்தியக் குறிப்புக்கள்.

**எமக்கு உற்ற துணை யார்?**

எமக்கு உற்ற துணையாக இருப்பது யார் என்றவுடன் மயக்கம் ஏற்படும். ஒருவர் சொல்லுவார் தந்தை, தாய், மனைவி, உறவினர்கள், கடவுள் என்ற நீண்ட வரிசையில் ஒருவர் சொல்லிவிடலாம் என்பவர் நினைப்பர். ஆனால் ஆன்மீக சிந்தனையில் எமது உடம்புதான் எமக்கு உற்றதுணையாக நவீன கருத்தாகும். எமது உடல் ஆரோக்கியம் சிறப்பாக வாழ்ந்தால் நாம் நீண்ட காலமாக உயிர் வாழ முடியும். இதனால் எமக்கு உற்ற துணை உடம்பாகும். உடம்பு உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தால் எமது உயிர் நீண்ட காலமாக உடம்பில் தங்கியிருக்கும்.

**வீட்டில் மூலிகைகள் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள்.**

- எமது பாரம்பரிய,பாதுகாக்கப்பட்ட இனிய நறுமணத்துடன் கூடிய காற்றோட்டம் கிடைக்கும் வீட்டுச் சூழல் தெய்வீகத் தன்மை பெறும். விஷ ஜந்துக்கள் வீட்டில் அணுகாது.
- வீட்டுச் சூழலில் அழகாகக் காட்சியளிக்கும் மூலிகைத் தோட்டத்தில் உலாவி தோட்டத்தை ஒழுங்கமைத்தல் நல்ல பொழுது போக்காக அமையும் இதனால் மன அழுத்தங்கள் நீங்கி மகிழ்ச்சியும் ஏற்படும்.
- மூலிகைகளை சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை இனம் காணக்கூடியதாக அமைவதுடன் மூலிகைகளின் வளர்ச்சி பற்றிய கல்வி அறிவு வளர்ச்சி பெறும்.
- தினமும் விதவிதமான, இயற்கையான, சுத்தமான (கிருமி நாசினிகள் அடிக்காத) சமைத்து உண்ணக் கூடிய மூலிகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். இதனால் நோய் இன்றி ஆரோக்கியமாக வாழலாம்.
- வீட்டிற்கு வருபவர்களுக்கும் கொடுத்து நல்லுறவை வளர்த்துக் கொள்ளலாம்.
- சாதாரண நோய்கள் ஏற்பட்டால் உடன் வீட்டு மூலிகைகளை பறித்து இலகு மருத்துவம் செய்து குணமாகலாம்.
- இதனால் நோய்கள் உடன் குணமாகின்றது. வீண் அலைச்சல் தவிர்க்கப்படுகின்றது.நேரமும் பணமும் மீதியாகின்றது. (சில நோய்களுக்கு உடன் வைத்தியசாலைக்கு சென்று மருத்துவ ஆலோசனைகளைப் பெறுதல் வேண்டும்) இடவசதிக்கு ஏற்றவாறு மூலிகைகளை வளர்த்து விற்று பணம் சேர்த்துக் கொள்ளலாம்.

**மூலிகைகளின் சிறப்புகள்:-**

- அறிவுக் கனியாகும் வாழைக்கனி மிக இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்கும். வாழைப்பழம் நம் உடலுக்கு நல்ல போசணையைத் தரும் . அதனால் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றது.
- **"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்."**
  அதிக விருப்பமான உணவு என்றாலும் சுகமாக்கும் மருந்து என்றாலும் விரும்பிய செயல் எதுவென்றாலும் அளவுக்கு மிகுதியாகப் போனால் அது அமிர்தமாக இருக்காது. நஞ்சாக மாறிவிடும்.
- **"வல்லாரை உண்டால் வல்லாரைவெல்லலாம்"**
  வல்லாரை ஞாபகசக்தியை அதிகரிப்பதுடன் உடற்பலத்தையும் அதிகரிக்கும். இதனால் வலிமையுள்ளவனை வெல்லலாம்.
- **"சுக்கைப் போல் மருந்தில்லை சுப்பிரமணியம் போல் தெய்வமில்லை"**
  கருணை வள்ளலான சுப்பிரமணியக் கடவுள் எம்மைக் காப்பது போல் மருந்துகளில் சுக்கு இல்லாமல் செய்வதுமில்லை. சுக்குத் தேநீர் குடித்தால் நல்லது.
- **"பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்."**
  பகைவன் வீட்டில் உண்பதனால் ஏதாவது நச்சுத் தன்மையிருந்தாலும் பத்துமிளகு விஷத்தைப் போக்கும். அதனால் எமது உணவிலும் மிளகு சேர்ப்பதனால் அதிலுள்ள நச்சினைப் போக்கும்.
- **"ஆலும் வேலும் பல்லுக்குறுதி"**
  ஆலமரப்பட்டையும் வேல் என்பது வேம்பு வெள் வேலமரம். அதன்பட்டையும் பற்களுக்கு பாதுகாப்பு.
- **"கறிவேப்பிலையோ - வேப்பிலைகாய்கறிக்கெல்லாம் தாய்ப்பிள்ளை"**
  காய்கறி எல்லாவற்றையும் சமைக்கும் போது நாம் கறிவேப்பிலை சேர்க்கிறோம்.
- **"பொன்னை எறிந்தாலும் பொடிக் கீரையை எறியாதே"**
  விலை கூடிய பொன்னை விட கீரை வகையானது மதிப்பு கூடுதலானது. அது உண்பதால் உடலுக்கு அதிக போசணையைத் தரும்.
- **காய்ச்சல், தலைவலி, மாசுபட்ட காற்று, வைரஸ் காய்ச்சலுக்கு குடிநீர் வகை**
  சுக்கு, கொத்தமல்லி, நற்சீரகம், கண்டங்கத்தரி, ஆடாதோடை, மரமஞ்சள், பற்படகம் 1/3 ஆக வத்த காய்ச்சி காலை, மாலை குடிக்கவும்.
- கருக்கா பேதி மருந்து குடித்தால் இரத்தத்தில் உள்ள கிருமிகளை நீக்கி கான்சர் போன்ற நோய் எமது உடம்பில் வராது.
- சுக்கு, மிளகு திப்பிலி சம அளவு எடுத்து இடித்து பவுடர் ஆக்கி 1/2 தேக்கரண்டி தேநீர் குடிக்கவும், முத்தோசம் நீங்கும்
- நெற்பொறி குடிநீர் குடிக்கவும்.

அன்பு உள்ளங்களே மேலே தரப்பட்ட இயற்கை வைத்தியத்தை படித்து வைத்தியாலைக்கு போகாமல் இயற்கையில் வாழ்ந்து எமது சமுதாயத்தை உயர்த்த பெண்கள் (தாய்க்குலம்) கருத்தடை மாத்திரை பாவிக்காமல் இரத்தம் கட்டி போன்ற நோய்களில் இருந்து விடுபட்டு பல குழந்தை செல்வங்களை பெற்று மிகமிகச் சிறப்பாக வளர சுன்னாகம் தாழையடி ஐயனாரையும் சுழிபுரம் பறாள பிள்ளையாரின் அருள் பெற்று இயற்கையாக வாழ வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

செ. கிருபாரத்தினம், (11 ஆவது வைத்திய பரம்பரை)
ஆயுள் வேத வைத்தியர்,
முன்னாள் இந்தியா ஈழ எதிரியர் மறுவாழ்வுக் கழகம்,
நல்லாயன் ஆராய்ச்சி மையம், பொறுப்பாளர்.
077 954 7589


அமரர் செல்லத்துரை ஞாபகார்த்த வைத்தியசாலை,
சுன்னாகம் NSB Bank வீதி, உடையர் வளவு
சுன்னாகம்.

(5918)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாரதம்

# ஒரே நேரத்தில் இரு நாடுகளு மோதத் தயார்!



## இந்தியா, ஆப்கானை சீண்டும் பாகிஸ்தான்

**(இஸ்லாமாபாத்) ............ இந்தியா மற்றும் ஆப்கானிஸ் தானுடன் ஒரே நேரத்தில் மோத லுக்கு தயார் எனப் பாகிஸ்தான் அமைச்சர் அறிவித்துள்ளார்.**



கடந்த சில மாதங் களாகவே பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இரு நாடுகளும் எல் லைப் பகுதிகளில் மேற் கொண்ட தாக்குதலில், 50இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து நடை பெற்ற அமைதி பேச்சு வார்த்தையும் தோல்வி யில் முடிந்துள்ளது.

இந்நிலையில், நவம்பர் 11 ஆம் திகதி, பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் தில் உள்ள மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் காரில் குண்டு வெடித்ததில் 12 பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலின் பின் னணியில் ஆப்கானிஸ் தான் இருப்பதாக பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் குற்றம்சாட்டினர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா உடன் மோதலுக்கு தயார் என கவாஜா ஆசிப் அறி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில், "கிழக்கு எல்லையில் இந்தியாவையும், மேற்கு எல்லையில் ஆப்கானிஸ்தானை ஆளும் தலிபான்களையும் எதிர்த்துப் போராட பாகிஸ்தான் இராணுவம் தயாராகவுள்ளது.

முதற்கட்டத்தில் அல்லாஹ் எங்களுக்கு உதவினார். 2ஆவது கட்டத்திலும் அல்லாஹ் எங்களுக்கு உதவுவார்.

## உக்ரைன் தலைநகரை தாக்கிய ரஷ்யா

### 9 பேர் படுகாயம்



(கீவ்)

உக்ரைனிய தலைநகர் கீவ் மீதான ரஷ்யாவின் பாரிய தாக்குதல்களில், குறைந்தது ஒன்பது பேர் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக கீவ் மேயர் வித்தாலி கிளி ட்ச்கோ தெரிவித்துள் ளார்.

காயமடைந்தவர்களில் ஒரு கர்ப்பிணிப் பெண் மற்றும் இரண்டு குழந்தைகள் அடங்கு வதாக தெரிவிக்கப்படுகின் றது.

இதேவேளை, குறித்த தாக்குதலில் மருத்துவ மனை வசதிகள் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் உட்பட பல மாவட்டங் களில் தீ விபத்துக்கள் மற்றும் சேதங்கள் ஏற்பட் டுள்ளன.

தாக்குதலின் விளை வாக ஏற்பட்ட மின்சாரத் தடைகள் சரிசெய்யப்பட் டாலும், வெப்பமூட்டும் வசதிகளில் தடைகள் இன்னும் நீடிப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும், மேயர் மருத்து வர்களும் அவசரகால சேவைகளும் எல்லா இடங்களிலும் செயற்படுவ தாகவும் அவர் உறுதிப் படுத்தினார். (ந)

## மூன்று செயற்கைக் கோள்களை ஒரே நேரத்தில் ஏவுகிறது ஈரான்




(டெஹ்ரான்)

உள்நாட்டிலேயே உரு வாக்கப்பட்ட மூன்று புவி கண்காணிப்பு செயற்கைக் கோள்களை, ஒரே நேரத்தில் விண்ணில் ஏவ உள்ளதாக ஈரான் தெரி வித்துள்ளது.

இது குறித்து, ஐ.எஸ்.ஏ., எனப்படும் ஈரான் விண்வெளி அமைப்பின் தலைவர் ஹசன் சலாரியே கூறியதாவது,

பல ஆண்டுகளாக மேற்கத்தேய நாடுகள் விதித்த பல்வேறு தடைகள் இருந்த போதும், விண்வெளி திட்டத்தில் பெரிய முன்னேற்றங் களை ஈரான் கண்டுள்ளது.

இதன்படி, உள்நாட்டிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

ளுடன்



அவர்கள் இறுதிக்கட்டதை விரும்பினால், போரைத் தவிர வேறு வழியில்லை.

ஆப்கானிஸ்தானில் ஒன்று பட்ட அரசாங்கம் இல்லை. உண்மையில், ஆப்கானிஸ் தான் வழியாக நம் நாட்டில் நடத்தப்படுவது இந்திய ஆக்கிர மிப்பாகும்.

பாகிஸ்தான் எந்த ஒரு இராணுவ நடவடிக்கையை யும் தொடங்காது. ஆனால், எந்தவொரு ஆக்கிரமிப்பிற்கும் பதிலளிக்காமல் விடமாட் டோம்.


நாங்கள் வலுவாக பதிலடி கொடுப்போம்" என தெரி வித்துள்ளார். (நி)

தயாரிக்கப்பட்ட பயா, ஜாபர், கோவ்சர் ஆகிய மூன்று செயற்கைக்கோள்களை, ஒரே ரொக்கெட் மூலம் ஒரே நேரத்தில் விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளோம்.

இதற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும். விவசாயம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு, பேரிடர் மேலாண்மை தொடர்பான தரவுகளை, இந்த மூன்று செயற்கைக்கோள்கள் வழங் கும் என அவர் தெரிவித் தார். (நி)



## இத்தாலியில் 'செக்கச் சிவந்த வானம்' அரிய நிகழ்வைக் கண்டுகளித்த மக்கள்



(வத்திக்கான்)

பொதுவாகத் துருவப் பகுதிகளில் மட்டுமே காணப்படும் அரிய இயற்கை நிகழ்வான "அரோரா போரியாலிஸ்", இத்தாலியின் ஆஸ்டா பள்ளத்தாக்கில் உள்ள மேட்டர்ஹார்ன் மலைப் பகுதியில் சிவப்பு வண்ணத்தில் காட்சிய ளித்து மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

பூமியின் காந்தப்புலம் மற்றும் சூரியனில் இருந்து வரும் மின்னூட்டப்பட்ட துகள்களின் இடை வினையால் ஏற்படும் இந்த "அரோரா" நிகழ்வானது, இரவு வானை ஒளிக் கதிர்களால் அலங்கரிக் கும் ஒரு அற்புதமா கும்.

வடதுருவத்தில் இது "அரோரா போரியாலிஸ்" எனவும், தென் துருவத் தில் இது "அரோரா ஆஸ்ட் ராலிஸ்" எனவும் அழைக் கப்படுகிறது.

இந்த நிகழ்வின்போது வானத்தில் வண்ணத் திரைச்சீலைகளால் அலங் கரித்தது போல, ஒளிக் கதிர்கள் சுருள் வடிவத் திலோ அல்லது மினு மினுக்கும் வடிவங்க ளிலோ தோன்றும்.

இவை சிவப்பு, பச்சை உள்ளிட்ட பல்வேறு வண் ணங்களில் காட்சியளிக் கும்.

இந்த "அரோரா போரியாலிஸ்" நிகழ்வை நோர்வே, சுவீடன், பின்லாந்து, ஐஸ்லாந்து, கிரீன்லாந்து, கனடா மற் றும் அலஸ்கா போன்ற நாடுகளில் அதிகம் காண முடியும்.

சில நேரங்களில் வட அமெரிக்கா மற்றும் இத்தாலி போன்ற நாடுகளில் உயரமான பகுதிகளிலும் இது தென் படுவதுண்டு.

இந்த நிலையில், தற்போது இத்தாலியின் ஆஸ்டா பள்ளத்தாக்கில் இந்த நிகழ்வு ஏற்பட்டுள் ளது.

வானம் முழுவதுமாக செக்கச் சிவந்த வண் ணத்தில் காட்சியளித்த இந்த அரிதான காட்சியை அப்பகுதி மக்கள் ஆச் சரியத்துடனும் மகிழ்ச் சியுடனும் கண்டுகளித் ததாகச் சர்வதேச ஊடகச் செய்திகள் தெரிவிக்கின் றன.


சுவீடன் மக்கள் இதை நல்ல செய்தியின் அடை யாளமாகப் பார்க்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக் கது. (நி)

## ஷேக் ஹசீனாவுக்கு எதிரான வழக்கு

### தண்டனையை அறிவிக்கிறது சர்வதேச குற்றத் தீர்ப்பாயம்

(டாக்கா)

மனித குலத்திற்கு எதிராக குற்றம் புரிந்ததாக வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா வுக்கு எதிரான வழக்கில், நாளை மறுதினம் அந் நாட்டின் சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் தண்டனையை அறிவிக்கவுள்ளது.



கடந்தாண்டு வங்க தேசத்தில் ஏற்பட்ட மாணவர் போராட்டத்தில் பெரும் வன்முறை வெடித் தது.

இதில், ஆயிரக்கணக்கா னோர் உயிரிழந்தனர். இந்த வன்முறையை தொடர்ந்து பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சி கவிழ்ந்தது.

மேலும், அவர் வங்க தேசத்தை விட்டு வெளி யேறி, இந்தியாவில் தஞ் சம் புகுந்தார்.

இதையடுத்து, நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில், வங்க தேசத்தில் இடைக்கால அரசு அமைந்தது. புதிய அரசு அமைந்த உடன் ஷேக் ஹசீனாவுக்கு எதி ராக இனப்படுகொலை, ஊழல் செய்தது உட்பட ஏராளமான வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

சமீபத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஷேக் ஹசீனாவுக்கு ஆறு மாத சிறை தண்டனை விதித்து, அந்நாட்டின் சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

கடந்த ஓகஸ்டில் அர சின் இடஒதுக்கீடு கொள் கைக்கு எதிராக போராடு வோரை சுட்டுக்கொல்ல ஹசீனா உத்தரவிட்ட ஓடியோ வெளியானது.

இதை ஆதாரமாக வைத்து ஷேக் ஹசீனா, முன்னாள் உள்துறை அமைச்சர், முன்னாள் பொலிஸ் ஐ.ஜி., ஆகியோர் மீது, மனித குலத்திற்கு எதிராக குற்றம் புரிந்ததாக புதிய வழக்கை தீர்ப்பாயம் பதிந்து விசாரணை நடத்தி வந்தது.

இந்த வழக்கில் ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட் டது.

இந்த நிலையில், ஷேக் ஹசீனாவுக்கான தண்ட னையை நாளை மறு தினம் வெளியிட இருப்ப தாக அந்நாட்டின் சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் அறிவித் துள்ளது.

இதனிடையே, வங்க தேச மக்களுக்கும் தேவையான நிபந்தனை. அது ஜனநாயகத்தில் பங் கெடுப்பது. தவிர, அவாமி லீக் கட்சி மீதான தடை விலக்கப்பட வேண்டும்.

நியாயமான, சுதந்திர மான தேர்தல் நடத்து வதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

இதற்கெல்லாம் இடைக் கால அரசு ஒப்புக்கொண் டால் மட்டுமே, மீண்டும் தாய்நாடு திரும்புவது சாத்தியமாகும் என்று ஷேக் ஹசீனா நிபந்தனை விதித்திருப்பது குறிப்பிடத் தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 கடவுச்சீட்டுகள் வீதியோரத்திலிருந்து மீட்பு




(கொழும்பு)

புல்மோட்டை 13ஆவது தூண் பகுதியில் வீதியோரத்தில் கைவிடப் பட்டிருந்த இலங்கையர்களுக்குச் சொந்தமான ஏழு வெளிநாட்டு கடவுச் சீட்டுகளை புல்மோட்டை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தக் கடவுச்சீட்டுகள் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த புதன்கிழமை மதியம் இந்தக் கடவுச்சீட்டுகளை மீட்ட தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கடவுச்சீட்டுகளை யாரோ இந்த இடத்தில் விட்டுச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்ற னர்.

இதை இந்த இடத்தில் யார் விட்டுச் சென்றனர் என்பதைக் கண்டறிய புல்மோட்டை பொலிஸார் விசாரணை யைத் தொடங்கியுள்ளனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா- 14 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSC,MSc,QS
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/16115

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி-பா-25
உயரம்:5'6"
தகைமை/தொழில்- Dip in Media, Reporter
எதிர்பார்ப்பு: பட்டதாரி ,ஆசிரியர்
தொ.இ: B/16118

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்:அத்தம்
கி-பா-45 1/2
2இல் செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L, Ambulance Driver
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்
தொ.இ: B/16119

பிறப்பு: 1982- இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
உயரம்:6'2"
தகைமை/தொழில்: O/L, Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16122

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:விசாகம்
10இல் சூரி செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BSC, MBA, Senior Marketing Executive
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16124

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: பூரம்
3இல் சூரி செவ்
கி-பா-26 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/16130

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்-உத்தராடம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip in ICT
எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்
தொ.இ: G/16134

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-அத்தம்
2இல்செவ்
கி.பா -23
உயரம்-5"4"
தகைமை/தொழில்: BSC, PHD, QA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16137

பிறப்பு-1987-RC
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - A/L, Care Taker
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16138

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:கேட்டை
12இல் சூரி செவ்
கி.பா - 03
உயரம்: 5'2"
தகைமை/தொழில்-MBBS
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: G/16142

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 484



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நாயின் நல்ல பண்புகள்

உங்களுக்கு கடவுள் பக்தி உண்டா? என்று கேட்டார் ஒருவர்.

உண்டு என்று சொன்னார் இன்னொருவர். அப்படி என்றால் நாயிடம் இருக்கின்ற நல்ல பண்புகள் எல்லாம் உங்களிடம் இருக்க வேண்டும் என்றார் அவர்.

இவருக்கு அதிர்ச்சியாகிவிட்டது. ஒன்றும் புரியவில்லை "என்னங்க திடீர் என்று இப்படி சொல்லிவிட்டீர்களே என்றார். நான் ஒன்றும் கிண்டலுக்காக அப்படிச் சொல்லவில்லை. வலிமார்களின் வரலாறு படித்தேன். அதிலே ஹஸன் பஸரி (ரஹ்) சொல்கிறார்.

"நாயிடம் பத்து நல்ல பண்புகள் உண்டு. இறை நம்பிக்கை உள்ளவர்களிடமும் அந்த பத்து நல்ல பண்புகள் இருக்க வேண்டியது அவசியம்" என்கிறார்.

சரி அப்படியென்ன பத்து நற்பண்புகள் நாயிடம்?

**முதலாவது பண்பு:** அது பசியிருக்கும். பசித்திருத்தல் என்பது நல்லவர்களின் நற்பண்பு.

**இரண்டாவது பண்பு:** அது தங்களுக்கு குறிப்பிட்ட இடம் கிடையாது. இந்த பண்பு இறை ஆதரவு பெற்றவர்களின் அடையா ளம்!

**மூன்றாவது பண்பு:** அது ராத்திரியிலே கொஞ்ச நேரம் தான் தூங்கும். இது இறை காதலர்களின் நற்பண்பு.

**நான்காவது பண்பு:** அது இறந்தால் அனந்தரம் கொள்ளும் பொருள் அதனிடம் கிடையாது. இது துறவிகளின் அடையாளம்.

**ஐந்தாவது பண்பு:** எஜமான் எத்தனை தடவை அடித்து விரட்டினாலும் அவனை விட்டு விலகாது. உண்மை ஆன்மிக மாணவர்களின் வழக்கம் இது.

**ஆறாவது பண்பு:** அது பூமியில் தாழ்ந்த இடத்தையே பொருத்திக் கொள்ளும். தாழ்மையுடையோர் நற்பண்பு இது.

**ஏழாவது பண்பு:** நாய் அதனுடைய இடத்தை வேறொன்று ஆக்கிரமித்துக் கொண்டால் அது வேறு ஒரு இடத்திலே போய் படுத்துக்கொள்ளும். இறை நாட்டமுள்ளோர் நற்பண்பு இது.

**எட்டாவது பண்பு:** எத்தனை தடவை விரட்டி அடித்தாலும் அதன் முன்னாடி ஒரு ரொட்டித் துண்டைக் காட்டினால் நட்பால் வருமே ஒழிய விடயத்துடன் வராது. இது பக்திமான்களின் நற்பண்பு.

**ஒன்பதாவது பண்பு:** உணவைக் கண்டால் அது தொலைவில் அமர்ந்து வழி பார்த்துக் கொண்டிருக்கும் இது ஏழைகளின் நற்பண்பு.

**பத்தாவது பண்பு:** அது ஒரு இடத்தை விட்டுக் கிளம்பிவிட்டால் மறுபடியும் அந்த இடத்தைத் திரும்பிப் பார்க்காது. இது விசாரமுடையவர்களின் குணம். ஆகக்கூடிய நாய்களிடமிருந்தும் நல்லவர்கள் கற்றுக் கொள்ளக்கூடிய நற்பண்புகள் இருக்கிறதா? இல்லையா?

ஆனால் நாம் என்ன செய்கிறோம்? அடுத்தவர்களைத் திட்டுவதற்கு நாய் என்கின்ற வார்த்தையே உபயோகப்படுத்திக்கிறோம். அவனிடம் பேச்சுக் கொடுக்காதே நாய் மாதிரி வள்ளு என்று விழுகிறான்! அப்படி என்று சொல்வது உண்டு!

ஒருவர் விதம் விதமாக நாய் குட்டிகள் வளர்த்துக்கொண்டிருந்தார். பல்வேறு இனங்கள், வெவ்வேறு ஜாதிகள் வெளிநாட்டு வகை எல்லாம் கொண்டுவந்து வைத்து விற்பனை செய்துகொண்டிருந்தார். எல்லாவற்றையும் வீட்டுக்குள்ளேயே வைத்து வளர்த்துக் கொண்டிருந்தார்.

அவரிடம் நாய்க்குட்டி விலைக்கு வாங்குவதற்காகப் போனார் ஒருவர். "சார் - ஒரு நல்ல ஜாதி நாய்க்குட்டி வேண்டும்.

எஜமான் விசுவாசம் அதிகமாக இருக்க வேண்டும். எப்போதும் என்னை விட்டுப் பிரியவே கூடாது. அப்படிப்பட்ட குணமுள்ள ஒரு குட்டியை நீங்களே பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொடுங்கள்!" என்றார்.

"அப்படி என்றால் அதோ உங்களுக்கு வலது பக்கம் கட்டிப் போட்டிருக்கிறேனே கறுப்பான அந்தக் குட்டியை எடுத்துக் கொண்டுப் போங்கள்!" என்றார் அவர்.

"இதற்கு எஜமான் விசுவாசம் அதிகமாக?" என்று கேட்டார் இவர்.

"ஆமாங்க... வளர்க்கிறவர்களிடம் ரொம்பப் பிரியமாக இருக்கும். பிரியவே பிரியாது!" என்றார் அவர்.

"அது எப்படி அவ்வளவு உறுதியாக சொல்கிறீர்கள்?" என்றார்.

இது வரைக்கும் இந்த நாய்க்குட்டியை ஏழு பேரிடம் விற்றிருக்கிறேன்..!" அழைத்துக்கொண்டு போன அடுத்த நாளே இங்கே ஓடி வந்துவிடுகிறது!" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டம்



(கரணவாய்)
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வரும் இளைஞர் பரிமாற்று வேலை திட்டத்தின் கீழ் களுத்துறை மாவட்டத்தை சேர்ந்த இளைஞர்கள் யுவதிகள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளனர்

வருகை தந்த இளைஞர் யுவதிகளால் நேற்றைய தினம் மாசார் சிறுவர் ஆனந்த சுற்றுப்பகுதியில் சிரமதானப்பணி மேற் கொள்ளப்பட்டது

இச் சிரமதான பணியில் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் மாசார் கிராம அலுவலர் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் சுஜீபன் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-60)

## சாவகச்சேரியில் மதுபானசாலைகளை மூடுவதற்கு தீர்மானம் நிறைவேற்றம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற இறைச்சிக் கடைகள் மற்றும் மதுபான சாலைகள் என்பன எதிர்வரும் மாவீரர் தினத்தன்று மூடுவதற்கு பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் இ.யோகேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற விசேட அமர்வில் மேற்படி விடயம் தொடர்பாக கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது.

அதற்கு சக உறுப்பினர்கள் மற்றும் தவிசாளர் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கிய நிலையில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்தின் அடிப்படையில் எதிர்வரும் 27 ஆம் திகதி அன்று சபை எல்லைக்குட்பட்ட சகல இறைச்சிக் கடைகள் மற்றும் மதுபான சாலைகள் என்பன மூடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-30)

## கல்விச் செயற்பாடுகளை ஆரோக்கியமான முறையில் மேற்கொள்வது அவசியம்

### அரச அதிபர் ம.பிரதீபன்



(யாழ்ப்பாணம்)
கல்வி செயற்பாடுகளை ஆரோக்கியமான முறையில் மேற்கொள்வதன் ஊடாக பள்ளிப் பருவப் பிள்ளைகள் ஆசிரியர்களை தம் மனதிலே இருத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படுவதாக யாழ்.மாவட்ட அரசாங்கதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

யாழ் சமூக செயற்பாட்டு மையம் நிறுவனத்தின் அனுசரணையுடன் தீவகத்தின் வேலணை, காரைநகர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படும் "சுய உதவிக் குழு அணுகு முறை ஊடாக பெண்களை வலுப்படுத்துவதனூடாக சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்" எனும் செயற்றிட்டத்தின் கீழ் தீவக வலய 25 ஆசிரியர்களுக்கான பிள்ளை நேய கற்பித்தல் வாண்மையினை விருத்தி செய்தல் மற்றும் சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான மூன்று நாள் பயிற்சி நெறியின் இரண்டாம் கட்ட செயலமர்வின் ஆரம்ப நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் பிள்ளை நேய கற்பித்தல் என்பது நடைமுறையில் ஏற்கனவே காணப்படுவதாகவும் அதனை மேலும் வலுப்படுத்தி விருத்தி செய்ய வேண்டிய தேவை காணப்படுவதாகவும் தெரிவித்தார். அத்துடன் தீவக பகுதி மாணவர்கள் தனித்துவமுடையவர்களாக காணப்படுவதாகவும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் வினைத்திறனாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து அவர்களை எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக உருவாக்க வேண்டும் எனவும் ஆசிரியத்துவம் நோக்கிய செயற்பாடு பிள்ளையின் நன்மை நோக்கியதாக அமைய வேண்டும் எனவும் தெரிவித்தார். (8)

## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு



(மன்னார்)
மன்னார் மாவட்டத்தில் வாழும் மாவீரர்களின் பெற்றோர் உரித்துடையோர் ஆகியோரை ஒன்றிணைத்து அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மன்னார் இரணை இலுப்பைகுளம், முள்ளிக் குளம் பண்டிவிருச்சான் ஆகிய பிரதேசத்தை சேர்ந்த 95 மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்

மன்னார் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இம் மதிப்பளிப்பு நிகழ்வில் அருட் தந்தையர்கள், முன்னை நாள் போராளிகள் மற்றும் பொது மக்கள் என பலர் பங்கு பற்றியிருந்தனர்.

மாவீரர்களின் பெற்றோர்களால் பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டு பின் அகவணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

குறித்த நிகழ்வில் மாவீரர்கள் பற்றிய பேச்சுக்கள் நடைபெற்றதுடன் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோருக்கு கௌரவிப்பு நினைவாக மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-285)

## பருத்தித்துறை புதிய சந்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது



(கொழும்பு)
பருத்தித்துறை நகரசபையின் புதிய சந்தை நேற்று மதியம் 12 மணியுடன் மூடப்பட்டுள்ளது.

புதிய சந்தையில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகள் காரணமாக நேற்று முன் தினம் வியாபாரிகள் மீண்டும் பருத்தித்துறை நகரிலுள்ள நவீன சந்தை கட்டட தொகுதிக்குச் சென்று வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் பருத்தித்துறை தவிசாளர் தலைமையில் 8 நகரசபை உறுப்பினர்கள் பருத்தித்துறை வர்த்தகர்கள் ஆகியோருக்கு இடையில் அவசர கூட்டம் நடத்தப்பட்டது.

அதில் வர்த்தகர்கள் புதிய சந்தைக்கு சென்று வியாபாரம் செய்யமாட்டோம் என தெரிவித்த நிலையில் புதிய சந்தையை மழை காலம் முடியும் வரை தற்காலிகமாக நவீன சந்தை தொகுதியில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை தமது வியாபார நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தினால் தாம் தற்கொலை செய்து கொள்வோம் என தெரிவித்து வியாபாரிகள் மண்ணெண்ணெயுடன் வியாபார நட வடிக்கையில் ஈடுபட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆனந்தபுரம் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள்



(நெளுக்குளம்)
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப் பணிகளை முன்னெடுக்கும் நடவடிக்கையில் மக்கள் மற்றும் பணிக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆனந்தபுரம் பச்சைபுல்மோட்டை மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்பரவு செய்யும் பணியில் மக்கள் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 இற்கும் மேற்பட்ட இடங்களில் மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளன.

கார்த்திகை 27 இல் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் சென்று தமிழர்களின் விடிவிற்காக உயிர்நீர்த்த மாவீரர்களை நினைவு கூர்ந்து வருகின்றார்கள்.

மணலாறு, களிக்காடு, அளம்பில் மாவீரர் , ஆலங்குளம், தேரவில், தேவிபுரம் ஆ பகுதி , முள்ளியவளை, இரணைப்பாலை, வன்னிவிளாங்குளம், இரட்டைவாய்க்கால், முள்ளி வாய்க்கால் , ஆனந்தபுரம், பச்சைபுல் மோட்டை போன்ற மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-299)

## அறிவுத் திருக்கோவிலில் மனவளக்கலைப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் பாடசாலை விடுமுறை காலத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை முதல் பாடசாலை மாணவர்களுக்கு விசேடமாக காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை மனவளக் கலைப் பயிற்சிகள் இலவசமாக நடைபெறவுள்ளது.

அத்துடன் சனிக்கிழமைகளில் மாலை 5 மணி முதல் 7 மணிவரை வழமை போல் நடைபெறும் பயிற்சிகளிலும் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.

பயிற்சிகளை முதுநிலைப் பேராசிரியர் அருள்நிதி ரி. காஞ்சிநாதன் வழங்கவுள்ளதுடன் மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளனர். (3)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 910





உள்ளே வந்தவர்கள் அவ்வளவு பேரும் ஒரு கணம் வியப்பினால் திகைத்துப் போய் நின்றார்கள். சுந்தர சோழரின் வெறி கொண்ட முகத் தோற்றமும், அவருடைய அலறும் குரலில் தொனித்த பயங்கரமும் அவர்களுக்குப் பீதியை உண்டாக்கின. மந்தாகினி தேவியை அங்கே பார்த்தது அவர்களை வியப்பு வெள்ளத்தில் திக்குமுக்காடச் செய்தது. இன்னது செய்வது என்று அறியாமல் எல்லாரும் சற்று நேரம் அசைவற்று நின்றார்கள். முதன் மந்திரி அநிருத்தர், நிலைமை இன்னதென்பதையும் அது எவ்வாறு நேர்ந்திருக்கக் கூடும் என்பதையும் ஒருவாறு ஊகித்து உணர்ந்து கொண்டார். அவர் பூங்குழலியைப் பார்த்து, "பெண்ணே! இவள்தானே உன் அத்தை?" என்றார்.

"ஆம், ஐயா!" என்றாள் பூங்குழலி.

"திருமலை! ஏன் மரம் போல நிற்கிறாய்? மந்தாகினி தேவி ஓடப் பார்க்கிறாள்! அவளைத் தடுத்து நிறுத்து, சக்கரவர்த்தியின் கட்டளை!" என்றார்.

ஆழ்வார்க்கடியான் தன் வாழ்நாளில் முதன்முறையாகக் குருவின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தான்.

"ஐயா! அதைக் காட்டிலும் புயற் காற்றைத் தடுத்து நிறுத்தும்படி எனக்குக் கட்டளையிடுங்கள்!" என்றான்.

இதற்குள் பூங்குழலி சும்மா இருக்கவில்லை. ஒரே பாய்ச்சலாக ஓடிச் சென்று அத்தையின் தோளைப் பிடித்துக் கொண்டாள். மந்தாகினி அவளை உதறித் தள்ளி விட்டு ஓடினாள்.

ஆழ்வார்க்கடியான் சட்டென்று ஒரு காரியம் செய்தான். சற்று முன்னால் முதன்மந்திரி முதலியவர்கள் நுழைந்து வந்த கதவண்டை சென்று அதைச் சாத்தித் தாளிட்டான். பிறகு கதவை யாரும் திறக்க முடியாதபடி கைகளை விரித்துக் கொண்டு நின்றான். வேடர்களால் சூழ்ந்து கொள்ளப்பட்ட மானைப் போல் நாலு புறமும் பார்த்து மிரண்டு விழித்தாள் மந்தாகினி. தப்பிச் செல்வதற்கு வேறு வழி இல்லை என்று, தான் இறங்கி வந்த வழியாக ஏறிச் செல்ல வேண்டியதுதான் என்றும் தீர்மானித்துக் கொண்டாள். அவள் மேல் மாடியை நோக்கிய பார்வையிலிருந்து அவளுடைய உத்தேசத்தை மற்றவர்களும் அறிந்து கொண்டார்கள்.

சுந்தர சோழர், "பிடியுங்கள்! அவளைப் பிடித்து நிறுத்துங்கள்! அவள் எதற்காக வந்தாள், யாரைப் பழி வாங்க வந்தாள் என்று கேளுங்கள்!" என்று மேலும் கத்தினார். தூணின் வழியாக மேல் மாடத்துக்கு ஏறிச் செல்ல ஆயத்தமாயிருந்த மந்தாகினி தேவியிடம் மறுபடியும் பூங்குழலி ஓடி நெருங்கினாள். இம்முறை அவளைப் பிடித்து நிறுத்துவதற்குப் பதிலாகப் பூங்குழலி கையினால் சமிக்ஞை செய்து ஏதோ கூற முயன்றாள்.

மந்தாகினி அதன் பொருளைத் தெரிந்து கொண்டவள் போல், கீழே விழுந்து கிடந்த அகல் விளக்கைச் சுட்டிக் காட்டினாள். இதைக் கவனித்துக் கொண்டிருந்த குந்தவை, "அப்பா! பெரியம்மாவின் பேரில் தாங்கள் தான் விளக்கை எடுத்து எறிந்தீர்களா?" என்று கேட்டாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மூத்தவனுக்கு ஏற்பட்ட மதிப்பு



(நேற்றைய தொடர்ச்சி)

உங்களுக்குப் பதிலாக நான் உழுகிறேன்" என்று சொல்லி, கலப்பையைக் கட்டி உழத் தொடங்கினான்.

வேப்ப மரத்து நிழலில் பஞ்சாயத்து நடந்து கொண்டு இருந்தது.

கலப்பையைக் கட்டி உழத் தெரியாமல் அண்ணன் முழிப்பான். அதன் பின், ஏர்பூட்டி வெயிலில் உழும்போது, இப்பொழுது தெரிகிறதா? உழுவதில் உள்ள கஷ்டம்? என்று அவனிடம் கேட்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த தம்பிகளுக்கு ஏமாற்றம் ஆகிவிட்டது. விவகா ரத்துக்கு வந்தவன் அவனுக்காகவே உழுகிறானே அண்ணன் மரத்து நிழலில் கால் மேல் கால் போட்டு, விவகாரம் தீர்த்துக் கொண்டிருப்பான் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. விவகாரம் தீர்ந்தது வந் தவர்கள் போய் விட் டார்கள்.

பகல் உணவுக்காக, சகோதரர்கள் உழவை நிறுத்தி விட்டு மரத்து அடியில் வந்து உட்கார்ந்தார்கள். ஆளுக்கு ஒரு பொட்டலத்தை பெரிதாகப்பார்த்து எடுத்துக் கொண்டனர். சிறிதாக இருந்ததைத் தொடவில்லை. அண்ணன் வந்து, மீதி இருந்த ஒரு பொட்டலத்தை எடுத்துப் பிரித்தான். சகோதரர்கள் அதைப் பார்த்ததும் வியப்படைந்தனர். "நிலத்துக்கு வந்தும்கூட, அண்ணனுக்கு அரிசிச் சோறு கிடைத்திருக்கிறதே. அது நம் கண்ணில் படவில்லையே" என்று பேசிக்கொண்டனர்.

பொட்டலத்திலிருந்த பதார்த்தத்தை எடுத்து சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் பிரியத் தோடு வற்புறுத்தி, கொஞ்ச கொஞ்சம் கொடுத்து தானும் உண்டான்.

சகோதரர்கள் மூத்தவனிடம், "நாளை முதல் நீ உழுவதற்கு வரவேண்டாம். முன் போலவே, வீட்டிலேயே இருந்து வழக்கம்போல் காரியங்களை பார்த்துக்கொள். எங்களுக்குப் பொறாமை இல்லை, அவரவர்களுக்கு உள்ளதுதான் கிடைக்கும்" என்று கூறினார்கள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான எண்ணங்களால் உங்களைச் சுற்றி அரண் அமைத்துக் கொள்ளுங்கள்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புலம்பெயர் உறவுகளுக்கு நாம் எழுதும் அன்பு மடல்

எம் புலம்பெயர் உறவுகளுக்கு அன்பு வணக்கம். முன்பும் உங்களுக்கான மடல்களை எழுதியிருந்தோம். தேவை கருதி எழுதப்பட்ட அந்த விடயங்கள் தொடர்பில் உங்கள் மனப் பதிவுகள் சாதகமாகவும் பாதகமாகவும் இருக்கலாம்.

போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் எது சரி என்று நம் மனச்சாட்சி சொல்கிறதோ அதை அப்படியே எழுதிவிட வேண்டும் என்பதுதான் நம் நிலைப்பாடு.

மற்றும்படி எவர் மீதும் நமக்கு எந்தக் காழ்ப்புணர்வும் இல்லை. தனிப்பட்ட பகைமையும் இல்லை என்பதை முதலில் உங்களுக்குத் தெரியப்படுத்துவது நமது கடமை எனக் கருதுகிறோம்.

இஃது ஒருபுறமிருக்க, புலம்பெயர் நாடுகளில் இருக்கக்கூடிய எங்கள் உறவுகளாகிய நீங்கள்; தாய் மண் மீது கொண்ட பற்றும் பாசமும் வேறு எந்த இனத்திலும் இருக்க முடியாது என்று கூறுமளவுக்கு, தாயகம் மீதான உங்களின் பாசம் என்றும் போற்றுதற்குரியது.

இதில் மாற்றுக்கருத்துக்கு அறவே இடமில்லை.

இருந்தும் நம் தமிழர் தாயகத்தில் அமைய வேண்டிய அரசியல் தலைமை தொடர்பில் நீங்கள் உங்கள் மட்டில் கூடி – தாயகத்தில் இருக்கக்கூடிய மக்களின் மனநிலை பற்றி எதுவும் அறியாமல், தீர்மானம் எடுப்பதைக் காணும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

ஆம், நீங்களும் நாங்களும் வேறன்று. ஆயினும் எங்கள் தாயகத்தின் அரசியல் தலைமை எப்படியாக இருக்க வேண்டும் – அது யாராக இருக்க வேண்டும் என்பதை முழுக்க முழுக்க தாயகத்தில் இருப்பவர்களே தீர்மானிக்க வேண்டும்.

இந்தக் கருத்தை தாயகத்தில் இருப்பதன் காரணத்தால் கூறுவதாக நீங்கள் யாரும் நினைத்துவிடலாகாது.

மாறாக, புலம்பெயர் நாட்டில் நாம் இருந்தாலும் அதுவே நமது நிலைப்பாடாகும்.

ஆம், அன்புக்குரிய புலம்பெயர் உறவுகளே! 2026ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவது உறுதியாயிற்று.

இஃது நீங்களும் அறிந்ததே. அதற்கான தயார்படுத்தல்களில் நம் தமிழ்த் தரப்புகள் களமிறங்கியுள்ளன.

இங்குதான் வடக்கின் அரசியல் தலைமை யார் என்ற கேள்வி எழுகிறது.

இந்தக் கேள்விக்கான பதிலை அறிவதில் நீங்கள் வாழும் புலம் பெயர் நாடுகளில் எழுந்துள்ள ஆர்வம் – வேகம் நம் தாயகத்தில் இல்லை.

இதற்குக் காரணம் அரசியலில் நமக்கு அக்கறை இல்லை என்பதல்ல. மாறாக, எங்கள் அரசியலில் எங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் – இழப்பு – நாம் நம்பியவர்கள் எமக்குச் செய்த துரோகம்.

எனவே தாயகத்து மக்களை மீறி – அவர்களின் எண்ணப்பாடுகளைக் கடந்து தமிழர் தாயகத்தின் அரசியல் தலைமை என்று நீங்கள் யாருக்கும் தலைப்பாகை கட்டிவிடாதீர்கள்.

ஏனெனில் எங்கள் எதிர்காலத்து தமிழ் அரசியல் தலைமை என்பது மிகவும் நிதானமாகச் சிந்தித்து, தீர விசாரித்து தீர்மானிக்கப்பட வேண்டிய அதி முக்கிய விடயமாகும்.

## இங்கிலாந்தில் விடுதலைப் புலிகளின் சர்வதேச தலைமையகம் உள்ளதாம்!

### புதுப்புரளி கிளப்பும் சரத் வீரசேகர

(கொழும்பு)

இங்கிலாந்தில் இன்னமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியக் கொடி தாராளமாகப் பறக்க விடப்படுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்த பிரிட்டிஷ் அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர சரமாரியாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் தொடர்ந்து கருத்துரைத்ததாவது,

இங்கிலாந்து தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கு பெரும் உதவி செய்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச தலைமையகம் இங்கிலாந்திலேயே அமைந்துள்ளது.

மேலும் விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரான அன்ரன் பாலசிங்கம் இங்கிலாந்து குடியுரிமை பெற்றிருந்தவர்.

கரன்னாகொட, சவேந்திர சில்வா, ஜகத் ஜயசூரிய ஆகியோருக்கும் வீசா வழங்கவும் இங்கிலாந்து மறுத்தது.

பிரிவினைவாத புலம்பெயர் தமிழர்களை இங்கிலாந்துதான் போசிக்கிறது.

அவர்களின் வாக்கு வங்கியின் பலத்தால் இவ்வாறு செய்கிறது.

அன்ரன் பாலசிங்கத்தின் மனைவியான அடேல் பாலசிங்கமே தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினர்களுக்குப் பயிற்சி வழங்கி சயனைற் குப்பியைக் கழுத்தில் மாட்டிக் கொள்ள உதவி செய்தவர் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மாகாணசபைத் தேர்தல் சிக்கலை ஆராயப் பிரதமர் தலைமையில் குழு

### அமைக்குமாறு எதிர்க்கட்சி கோரிக்கை

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் சட்ட சிக்கலைத் தொடர்ந்து காரணமாகக் காட்டாது தீர்க்கமான தீர்மானமொன்றை எடுப்பதற்காகப் பிரதமர் தலைமையில் குழுவொன்றை அமைக்குமாறு சபாநாயகரிடம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் 2 ஆம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே எதிரணி பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க எம்.பி. மேற்படி கோரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்காக வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே தேர்தல் முறைமை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டியது பாராளுமன்றத்தின் பொறுப்பு என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

தேர்தல் முறைமை தொடர்பில் சட்டம் இயற்றித் தருமாறு ஜனாதிபதி பாராளுமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். எனவே பிரதமர் தலைமையில் விரைவில் குழுவொன்றை நியமிக்குமாறு எதிரணியின் சார்பில் கோரிக்கை விடுக்கின்றேன்.

பழைய முறைமையிலேனும் தேர்தலை நடத்தி மக்களுக்குரிய ஜனநாயக வாய்ப்பை வழங்க வேண்டும். தாம் ஆட்சிக்கு வந்த பின்னர் ஒரு வருட காலப்பகுதிக்குள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் எனத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியளித்திருந்தது. அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றார். (ம-7)

## அனுமதி இன்றி இயங்கிய யோக்கட் தொழிற்சாலைக்கு ரூ.25,000 தண்டம் விதிப்பு

(புதுக்குடியிருப்பு)

உடையார்கட்டுப் பகுதியில் அனுமதி இன்றி செயற்பட்டு வந்த யோக்கட் உற்பத்தித் தொழிற்சாலையொன்றில் நேற்று (14) திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட இந்தச் சோதனையில், தொழிற்சாலையில் முறையான அனுமதி பெறப்படாமை, முகச்சவரம் செய்யாமை, தண்ணீர் பகுப்பாய்வு சான்றிதழ் இன்மை உள்ளிட்ட குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

இதனைத் தொடர்ந்து தொழிற்சாலை உரிமையாளர்கள் மீது உடையார்கட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரதாஸ் மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

விசாரணையில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட உரிமையாளர்களுக்கு நீதிமன்றம் 25,000 ரூபா அபராதம் விதித்ததுடன் உடனடியாகத் தவறுகளைச் சீர் செய்யுமாறும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் நிகழாதவாறு செயற்படுமாறும் நீதிமன்றம் கடுமையான எச்சரிக்கை வழங்கியுள்ளது. (ம-7,299)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025

“பசிய காடுகள் இயற்கையின் படைப்பு. பாலை வனங்கள் மனிதனின் படைப்பு”



கவிஞர் இக்பால்

## போதைப்பொருள் சுற்றிவளைப்பில் இரு வாரங்களில் 16,738 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் ஒக்ரோபர் 30ஆம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட போதைப் பொருள் சுற்றிவளைப் பின்போது 16 ஆயிரத்து 738 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சுற்றிவளைப்பில் நாடளாவிய ரீதியில் 16 ஆயிரத்து 915 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 110 கிலோ 556 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் 600 கிலோ 947 கிராம் ஐஸ் போதைப் பொருளும் 10 கிராம் கொக்கேயின் போதைப் பொருளும் 458 கிலோ 216 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் 10 இலட்சத்து 15 ஆயிரத்து 632 கஞ்சா செடிகளும் 4 கிலோ 847 கிராம் குஷ் போதைப் பொருளும் 25 கிலோ 483 கிராம் ஹசீஸ் போதைப் பொருளும் 41 ஆயிரத்து 874 மாத்திரைகளும் 36 கிலோ 176 கிராம் மாவா உள்ளிட்ட போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் 313 பேரைப் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணம் செய்யாமல் பெற்றோரை பராமரிக்கும் பிள்ளைகளுக்கு ஓய்வூதியம்

(கொழும்பு)

திருமணத்தைப் பற்றி யோசிக்காமல் பெற்றோரை பராமரிப்பதற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கும் பிள்ளைகளுக்கு ஓய்வூதியம் வழங்க சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பிள்ளைகளுக்கு 26 வயதை எட்டிய பின்னர் ஓய்வூதியம் வழங்க சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபயரத்ன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வயதான பெற்றோரைப் பராமரிப்பதற்காக பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிப்பது ஒரு சிறப்பு விடயம் எனவும், இதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை செய்ய முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, ஓய்வூதியம் பெறுபவரின் மரணத்திற்கு பின்னர் வாழ்க்கைத் துணைவருக்கும், வாழ்க்கைத் துணையின் மரணத்திற்குப் பிறகு 26 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு தற்போது ஓய்வூதிய சலுகைகள் வழங்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சேனா நாணயக்கார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக அமைச்சர் சந்தன அபயரத்ன இதனைத் தெரிவித்தார். (நி)

# விசா கட்டணத்தை உயர்த்தும் ஜப்பான்

(டோக்கியோ)

2026 ஆம் ஆண்டில் ஜப்பான் மேற்கொள்ளவுள்ள விசா கட்டண உயர்வால் கடுமையான பயண சவாலை இலங்கை எதிர்கொள்ளும் என தெரிவிக்கப்படுகின்றது.

அது மாத்திரமன்றி வியட்நாம், இந்தியா, சீனா, மலேசியா உள்ளிட்ட பல ஆசிய நாடுகளுக்கு இந்த சிக்கல் ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது.

கிட்டத்தட்ட ஐந்து தசாப்தங்களில் முதல் முறையாக, ஜப்பான் விசா கட்டணங்களை உயர்த்த முடிவு செய்துள்ளது.

இது நாட்டின் உட்கட்டமைப்பு மற்றும் பிரபலமான சுற்றுலா தலங்களில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

நிலைத்தன்மையான முயற்சிகளுக்கு கூடுதல் வருவாயை ஈட்டவும், சுற்றுலா நிர்வாகத்தை மேம்படுத்தவும், கூட்ட நெரிசலைக் குறைக்கவும், இறுதியில் உள்ளூர் மற்றும் பிற பார்வையாளர்கள் இருவருக்கும் ஜப்பானில் பயணத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கவும் இந்த நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கவிஞர் சு.நிஷே விதசர்மா எழுதிய 'காதோரமுத்தங்கள்' எனும் காதல் சார்ந்த கவிதை நூல் கடந்த 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஜே ஹோட்டலில் வெளியிடப்பட்டது.

(படம்- சிவசாந்தன்)

## சந்தைகளில் நேற்றைய விலை / பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 250 | 200 | 170 |
| உருளைக்கிழங்கு | 220 | 190 | 180 | 240 | 230 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 250 | 250 | 230 |
| தக்காளி | 180 | 200 | 180 | 200 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 150 | 200 | 120 | 70 |
| கோவா | 180 | 200 | 200 | 250 | 140 |
| கரட் | 200 | 250 | 300 | 250 | 200 |
| பூசணி | 80 | 80 | 50 | 100 | 30 |
| புடோல் | 220 | 300 | 120 | 250 | -- |
| வாழைக்காய் | 150 | 80 | 50 | 150 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-300 | 200 | 350 | 230 |
| பெரிய வெங்காயம் | 180 | 190 | 150 | 200 | 145 |
| பாகற்காய் | 800 | 500 | 400 | 1200 | 400 |
| வெண்டக்காய் | 150 | 200 | 120 | 200 | 100 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 200 | 220 | 225 |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 250 | 250 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 240 | 150 |
| பீற்றூட் | 200 | 180 | 120 | 200 | 100 |
| கறிமிளகாய் | 600 | 550 | 600 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 500 | 700 | 400 | 500 | 250 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 400 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 120 | 180 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 30-120 | 80 | 120 | -- |
| தேசிக்காய் | 2000 | 1600 | 1000 | 800 | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 210 | 160 | 150-200 | 150 |
| இராசவள்ளி | 450 | 700 | 500 | 800 | 600 |
| வெங்காயப்பூ | 600 | | -- | | -- |
| முள்ளங்கி | 150 | 180 | 150 | 300 | 70 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 100 | 60 | 40 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 80 | 40 |
| ஈரப்பலா | 150 | 150 | 120 | 200 | -- |

# இராசிபலன்

15.11.2025,
ஐப்பசி 29 , சனிக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 5.36 மணிவரை

உத்தரம் பின்னிரவு 2.56 மணிவரை
சுபநேரம் 3.07-4.37 மணிவரை
இராகுகாலம் 9.07 -10.37 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்
அவிட்டம்.

வளவன்

**மேஷம்**
மற்றவர்கள் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உடல் நலன் சீராகும்.

**ரிஷபம்**
பிள்ளைகளின் தேவை அறிந்து பூர்த்தி செய்வீர்கள் கனவுகள் நனவாக இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்**
பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், பயணங்களின் போது பிரபல மானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம் ,வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**கடகம்**
கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**கன்னி**
பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் கிடைக்கும் நாள்.

**துலாம்**
சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் கூடும், போசன சுகமுண்டு.

**தனுசு**
குடும்ப ஒற்றுமை கூடும், வழிபாட்டால் குதூகலம் கூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்**
மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்**
குடும்பப் பொறுப்புக்கள் கூடும் , கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.

**மீனம்**
நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், சொந்த பந்தங்கள் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள்.

ஒரு பிறவியானாலும் நேர்மையான வாழ்க்கை வாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருட்...

வர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கொட்டடி - கண்ணாபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 2 கிலோ 790 கிராம் எடையுடைய கஞ்சா கலந்த மாவாவும் 50 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## புலிகளின்...

அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.ஹெச்.மஹ்றூஸ்னின் நேரடி மேற்பார்வையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றிருந்தன.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், புதுக்குடியிருப்புப் பொலிஸார் இணைந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

நீதிமன்றத்தில் 10 அடி ஆழம் வரை அகழ்வதற்கு அனுமதி பெறப்பட்டு பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றிருந்தன.

குறித்த பகுதியில் எதுவும் கிடைக்கப்பெறாத நிலையில் அப்பகுதியின் அருகாமையில் அகழ்ந்து பார்ப்பதற்கு அனுமதி வழங்குமாறு உரிய தரப்பினர் கோரிய நிலையில் பிறிதொரு நாளிற்கு அனுமதி கோருமாறு நீதிபதி கூறியிருந்ததுடன், குறித்த அகழ்வு இடம்பெற்ற பகுதியை மூடுமாறு நீதிபதி உத்தரவு வழங்கியதனையடுத்து மூடப்பட்டிருந்தது.

தற்போது குறித்த அகழ்வு இடம்பெற்ற பகுதியில் 2021ஆம் ஆண்டு அகழ்வு இடம்பெற்று எதுவும் கிடைக்காத நிலையில் மூடப்பட்டிருந்தது.

இருப்பினும் இதுவரை இடம்பெற்ற அகழ்வுப் பணிகளில் எவ்வித ஆயுதங்களோ, தங்கங்களோ மீட்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## வர்த்தமானியின்...

துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 07.11.2025 அன்று வெளியாகியுள்ளது.

எனினும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பில் விஞ்ஞான பாடம் (தமிழ் மொழி மூலம்), கணித பாடம் (தமிழ் மொழி மூலம்) என்பனவற்றுக்கு ஆசிரிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்கின்ற விடயம் உள்ளடங்கவில்லை.

அதேநேரம் சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் வெளியாகிய வர்த்தமானி அறிவித்தலில் தமிழ் மொழி மூலமான விஞ்ஞானம் மற்றும் கணித பாடத்துக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எனவே தமிழ் மாணவர்கள் தமிழ் மொழி மூல விஞ்ஞான மற்றும் கணித பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும் என தேசிய கல்வியியற் கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேநேரம் குறித்த தவறைத் திருத்தம் செய்து அதை மீள அறிவிப்பது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ந)

## பட்ஜெட்டை...

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாக்கெடுப்பை புறக்கணித்துள்ளது. (ம-7)

## 118 மேலதிக...

எதிராக 42 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 8 பேர் வாக்களிப்பில் இருந்து விலகினர்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினர்களான மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஸ்ணன் ஆகியோர் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். (ம-7)

## 2026ஆம்...

கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில் 2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சைகள் 2026 பெப்ரவரி 17 முதல் பெப்ரவரி 26 வரையும் 2026 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகள் ஓகஸ்ட் 9ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

2026 க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் ஓகஸ்ட் 10 முதல் செப்ரெம்பர் 05 ஆம் திகதி வரையும் 2026ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சைகள் 2026 டிசம்பர் 08 முதல் டிசம்பர் 17ஆம் திகதி வரையும் இடம்பெறுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார். (ம-7)

## மனை...

ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் உரும்பிராய் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ஜெ.சுரேந்தன் (வயது-33) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த எட்டாம் திகதி இரவு மனைவி, பிள்ளைகளுடன் முரண்பட்ட நிலையில் அவர்கள் வீட்டை விட்டு வெளியேறியிருந்தனர்.

பின்னர் கதிரையில் அமர்ந்திருந்து கழுத்தில் சுருக்கிட்டவாறு தான் தற்கொலை செய்யப் போவதாக மனைவியுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

தொடர்ந்து உரையாடியவாறே உறங்கியுள்ளார். பின்னர் அவரது சகோதரன் அங்கு சென்று பார்த்தவேளை அவர் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருந்தார்.

பின்னர் சகோதரன் அவரது கழுத்தில் இருந்த கயிற்றினை கழற்றிவிட்டு கீழே உறங்க வைத்தார்.

இந்நிலையில் சிறிது நேரத்தில் அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதனால் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60,104)

## பேருந்து தரிப்...

யிறவு தட்டுவன்கொட்டிப் பகுதியிலேயே குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 36 வயது மதிக்கத்தக்க பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

மஹஜன சம்பத — திகதி 2025.11.14 — சீட்டிழுப்பு இலக்கம் 6013 — Q 2 9 1 0 1 8
அத சம்பத — Q 1 0 1 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0588
சுப தவசக் — 2025.11.14 — 129 — விருச்சிகம் 01 42 50 — 5843
தன நிதானய — திகதி 2025.11.14 — சீட்டிழுப்பு இலக்கம் 2043 — Q 19 21 59 69 Q
மெகா பவர் — திகதி 14/11/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2361 — P 24 17 31 38 68
ஜய — திகதி 2025.11.14 — சீட்டிழுப்பு இலக்கம் 0281 — I 1 1 2 4
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4255 — சீட்டிழுப்பு திகதி 14.11.2025 — C 14 33 65 75 — C
HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.11.14 — சீட்டிழுப்பு இலக்கம் 1322 — மகரம் 23 50 52 55 மகரம்
உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் தன சம்பத — 14.11.2025 — 0721 — T 0 7 6 6 9 1 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,623,009.60
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2987 — சீட்டிழுப்பு திகதி 2025.11.14 — தினம் வெள்ளிக்கிழமை — 34 44 59 72 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,981,372.80
சனிதா — 14.11.2025 — 5148 — 04 36 64 75 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,623,557.60
சசிரி — 817 — 14.11.2025 — வெள்ளிக்கிழமை — 02 10 18 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4699 — சீட்டிழுப்பு திகதி 14.11.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 08 18 35 58 துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,974,099.20
ஜய செத — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — O 24 11 52 63 69 — 2163 — 14.11.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.607,144,029.60
அட கோடிபதி — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2813 — சீட்டிழுப்பு திகதி 2025.11.14 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,507,132.00 — 16 17 27 36 J

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தமிழர்களின்...

வட மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் நடாத்திய கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சி நல்லூர் கிட்டுப் பூங் காவில் நேற்று நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடரந்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக் குத் தீர்வு கிடைக்க வேண்டுமென்றால் தமிழ்க் கட்சிகள் முதலில் ஒற்றுமை ப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க தற்போது சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்திலும் சர்வ தேசத்திலும் தமிழ் மக்களின் பிரச்சி னைகளைத் தீர்ப்பதற்கான சாதகமான சூழ்நிலை தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த சாதகமான சூழ்நி லையை தமிழ் அரசியல் கட்சிகள் பயன்படுத்த வேண்டும். அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்தால் மட்டுமே நமக்குத் தேவையானவற்றை அரசி யல் அமைப்புச் சட்டத்தின் ஊடாக மேற்கொண்டு விட முடியாது. அதற்கு சிங்களவர்களும் எம்மோடு கைகோ ர்க்க வேண்டும்.


நமது போராட்டம் உண்மையில் வெற்றி கண்டு பல ஆண்டுகளாகி விட்டன. ஆனால் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்படாமையே எமது தனிநாடு கனவு கலையக் காரணம்.

எனவே சர்வதேச அங்கீகாரம் என் பது அவசியம். இந்தியா இலங்கைக்கு 13 ஆம் சீர்திருத்தத்தைக் கொண்டு வரவும் சர்வதேச அரசியலே பின்ன ணிக் காரணம்.

எமது வடுக்கள் நிறைந்த வரலாறு இரத்தமும் சதையுமாகப் போராடிய எமது போராட்ட நோக்கம் என்பன எமது இளைய தலைமுறையினருக்கு உணர்த்தப்பட வேண்டும்.

எமது அருமை சகோதரர்களே, நாம் அடுத்து என்ன செய்யப்போகின்றோம் என்பதுதான் இங்கு முக்கியமானது.

சிதறிக்கிடக்கும் தமிழர்களை ஒருங் கிணைக்க வேண்டும். அதுவே எமக் குள்ள சவால். இந்த அடிப்படையில் தான் பயணிக்க வேண்டும். அதுவே எமது தேசத் தலைவர் பிரபாகரனின் நோக்கமும் என்றார். (ம-7)





சிவ பக்தியினால் காலனை யும் வெல்லலாம் என்றுணர்த்திய மார்க்கண்டேயர் வரலாற்றுடன் தொடர்புடைய இயமசங்ஹாரமும் சிவன் காலசம்ஹார மூர்த்தியாக அருள்பாலித்தலும் ஐப்பசி வெள்ளி நன்னாளான நேற்று வெள்ளிக் கிழமை சிவாலயங்களில் இடம் பெற்றது.

நல்லூர் சிவன் கோவில், நகு லேஸ்வரம் ஆகிய ஆலயங்களில் இடம்பெற்ற இயம சங்ஹாரத்தை படங்களில் காணலாம்.


### காணி உடன் விற்பனைக்குண்டு

பலாலி வீதியுடனான கோண்டாவில் டிப்போக்கு அருகில் உள்ள VIP திருமண மண்டபத்திற்கு பக்கத்தில் உள்ள 7 பரப்புக் காணி சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (5902)

**075 945 3391**

### காணி விற்பனைக்கு

நீர்வேலிச் சந்தியில் வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நல்ல சூழலில் 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (5913)

**071 016 9768, 076 481 1296**
**076 917 0364, 077 437 0882**

### கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2430/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4330)

UK 11Kg - 1390/- France 11Kg - 2160/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2280/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 076 822 6237

## காணிகள் தேவை

**“ஜெயம் றியல் எஸ்டேட்” நிறுவனத்திற்கு உடனடியாகக் காணிகள் தேவை.**

- கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், நீர்வேலி, ராச பாதை வீதி, நிலாவரை, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய்,ஊரெழு, மானிப்பாய், தெல்லிப்பளை போன்ற இடங்களில் 2 பரப்புக்கு மேற்பட்ட காணிகளும் அத்துடன் அமைந்த வீடுகளும் விற்பனைக்கு இருந்தால் உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.
- ஆவணங்கள் அனைத்தும் சட்டத்தரணி மூலம் சரிபார்க்கப்பட்ட பின்னர் விலை கொடுத்து வாங்கப்படும்.
- தரகு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட காணிகளின் உரிமையாளர்களோ சமூக வலைத்தளங்கள் மூலம் விளம்பரங்கள் செய்யப்பட்ட காணிகளின் உரிமையாளர்களோ தொடர்பு கொள்ள வேண்டாம்.
- “ஜெயம் றியல் எஸ்டேட்” நிறுவனம் காணிகள் வீடுகளை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் நிறுவனம் ஆகும். எனவே காணிகள், வீடுகள் விற்பனைக்கு இருப்பின் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : ஜெயம் (5917)

**சதீஸ் - 077 986 5457**
**ஜெயம் - 077 805 1655**

### யாழ்ப்பாணத்தில் Voyzant
### சுற்றுலாப் பயணம்

மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், வியட்நாம், மாலைதீவு, துபாய் போன்ற நாடுகளிற்கான சுற்றுலாப் பயணங்கள் தனிப்பட்ட/ குழுக்களிற்கு ஏற்றவாறும் செய்து தரப்படும்.



மேலதிக விபரங்களுக்கு : **Voyzant(PVT)Ltd**
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866 (5725)

### வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு கணணியில் சிட்டை போடுவதில் அனுபவம் வாய்ந்த ஆண் பணியாளர் ஒருவரும், கொத்து றொட்டி தயாரிப்பவர், பிறைட் றைஸ் போடுபவர், உணவு பரிமாறுபவர், சமையலாளர் போன்ற பணிகளுக்கு பணியாளர்கள் தேவை. தகுதியுடையவர் தொடர்பு கொள்ளவும். (5926)

தொடர்புகளுக்கு : **077 649 1027**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 5Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 224/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 258/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 150/= | Max 5Kg |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 239/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 199/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 254/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பயறு | - 690/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 975/= | |
| 1Kg கறுப்பு கௌப்பி | - 1290/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= ~~70~~ | |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும். (1704)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.